# தினபூமி

thinaboomi.com

பூமி: 26 சுற்று : 184 கார்த்திகை 28

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், ஞாயிறு, டிசம்பர் 14, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**தாய்லாந்து-கம்போடியா இடையே மீண்டும் போர் நிறுத்த உடன்பாடு: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தகவல்**

....2-ம் பக்கம்

**நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் திருவனந்தபுரத்தில் பா.ஜ.க. வெற்றி: கேரள மக்களுக்கு பிரதமர் மோடி நன்றி**

...3-ம் பக்கம்

**'சால்ட் லேக்; மைதானத்தில் சில நிமிடங்கள் மட்டும் இருந்த மெஸ்ஸி: கோபத்தில் சூறையாடிய ரசிகர்கள்**

....6-ம் பக்கம்





திருவண்ணாமலையில் இன்று நடக்கும் தி.மு.க. இளைஞரணி வடக்கு மண்டல சந்திப்பு கூட்டத்திற்கு தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், காணொலிக் காட்சி வாயிலாக கழக இளைஞரணிக்கு அழைப்பு விடுத்தார்.

### முதல்கட்டமாக திருவண்ணாமலையில் இன்று நடைபெறுகிறது:

# தி.மு.க. இளைஞரணி வடக்கு மண்டல நிர்வாகிகள் மாநாடு

## முதல்வர் முக.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரை

திருவண்ணாமலை, டிச. 14-

**திருவண்ணாமலையில் இன்று முதற்கட்டமாக தி.மு.க. இளைஞரணி வடக்கு மண்டல நிர்வாகிகள் மாநாடு நடைபெறுகிறது. தி.மு.க. இளைஞரணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை நடைபெறும் இம்மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.**

தி.மு.க.வில் சட்டமன்ற தேர்தல் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. தேர்தலையொட்டி பல்வேறு அணிகளின் செயல்பாடுகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. தி.மு.க. இளைஞர் அணியில் தமிழகம் முழுவதும் 5 லட்சம் நிர்வாகிகள், 50 லட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இதில் உள்ள 5 லட்சம் நிர்வாகிகளை ஒன்றிணைத்து மண்டலம் தோறும் நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு நடத்த தி.மு.க. தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். அதன்படி முதற்கட்டமாக வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு திருவண்ணாமலையில் இன்று நடைபெறுகிறது.

இதில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு இளைஞர் அணியினருக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி பேசுகிறார். இதற்காக திருவண்ணாமலை அருகே உள்ள வாணியந்தாங்கள் பகுதியில் பிரமாண்ட மேடை பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு கலைஞர் திடல் என பெயரிடப்பட்டுள்ளது. இந்த கலைஞர் திடலில் இன்று மாலை 4 மணிக்கு தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் மாநாடு தொடங்குகிறது.

நிகழ்ச்சிக்கு தி.மு.க. இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்குகிறார். முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை ஆற்றுகிறார். பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வரவேற்று பேசுகிறார். அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்கின்றனர். இதில் 1.30 லட்சம் இளைஞர் அணியின் நிர்வாகிகள் பங்கேற்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய 6 மாவட்டங்களை சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் திருவண்ணாமலையில் குவிந்துள்ளனர். முதல்வர் மற்றும் துணை முதல்வர் வருகையையொட்டி திருவண்ணாமலை நகரம் மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் பகுதிகளில் தி.மு.க. கொடி தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன. பிரமாண்ட வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

திருவண்ணாமலையில் இன்று நடைபெற உள்ள தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டுக்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாவட்ட எல்லையில் உற்சாக வரவேற்பு அளிக்க அனைவரும் அணி திரண்டு வாருங்கள் என அமைச்சர் எ.வ.வேலு அழைப்பு விடுத்துள்ளார். மேலும் பாதுகாப்பு பணிக்காக போலீசார் குவிக்கப்பட்டு உள்ளனர்.

### 16 சதவீதம் ஜி.எஸ்.டி.பி. வளர்ச்சியுடன் பெருமாநிலங்களை பின்னுக்குத் தள்ளி

# நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் பிடித்து சாதனை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, டிச. 14-

**மத்திய அரசின் ஆதரவு பெருமளவு இல்லாமல் ஜி.எஸ்.டி.பி. வளர்ச்சியில் 16 சதவீதம் பெற்று பெருமாநிலங்களை பின்னுக்குத் தள்ளி நாட்டிலேயே நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது என முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார். மேலும் தனிநபர் வருமான உயர்விலும் தமிழ்நாட்டின் வெற்றி தொடர்வதாக அவர் தெரிவித்துள்ளார்.**

**பெரிய மாநிலம் இல்லை....**

ஜி.எஸ்.டி.பி. என்பது ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தைக் குறிப்பதாகும். இது குறித்து அவர் தனது எக்ஸ் பகத்தில், "வானுயர் ஜி.எஸ்.டி.பி. வளர்ச்சி விகிதத்தில் பெருமாநிலங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளி தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது. பரப்பளவில் பெரிய மாநிலம் இல்லை, மக்கள் தொகையிலும் பெரிய மாநிலம் இல்லை, மத்திய அரசின் ஆதரவு பெருமளவில் இல்லை, இருந்தும் ஜி.எஸ்.டி.பி. வளர்ச்சியில் 16 சதவீதத்துடன் தமிழ்நாடு நம்பர் ஒன் என்றால் அதுதான் திராவிட மாடல். கடந்த மூன்றாண்டுகளில் நிலையான, அதேவேளையில் மிக அதிகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது தமிழ்நாடு தான். சொல்வது நாம் அல்ல, இந்திய ரிசர்வ் வங்கி.

**10.5 லட்சம் கோடி ரூபாய்...**

2021-2025 வரையிலான நிதியாண்டுகளில் மட்டுமே 10.5 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது தமிழ்நாட்டின் பொருளாதாரம். மொத்த மதிப்பு ரூ. 31.19 லட்சம் கோடி. நம்மோடு ஒப்பிடத்தக்க, வளர்ந்த பெரிய மாநிலங்களான, மகாராஷ்ட்டிரா, கர்நாடகம், குஜராத் போன்றவற்றை விஞ்சிய இந்த வளர்ச்சி விகிதம் தமிழ்நாட்டுக்கே சொந்தம். தனிநபர் வருமான உயர்விலும் தொடர்கிறது தமிழ்நாட்டின் வெற்றி. 2031-ம் ஆண்டு திராவிட மாடல் 2.0 நிறைவுறும் போது, இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தில் இல்லாத துறையே இல்லை என்ற நிலையை உருவாக்கிக் காட்டுவேன், இது உறுதி. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் பூர்த்தி செய்யப்பட்ட

# எஸ்.ஐ.ஆர். விண்ணப்பங்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாள்

## வரும் 19-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு

சென்னை, டிச. 14-

**தமிழகத்தில் பூர்த்தி செய்யப்பட்ட எஸ்.ஐ.ஆர். படிவங்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாளாகும். வரும் 19-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிடுகிறது.**

எஸ்.ஐ.ஆர். பணிகள் நடைபெறும் மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டபடி, இந்த பணிகளுக்கான கால அளவை தேர்தல் ஆணையம் மேலும் நீட்டித்தது. தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களிலும், புதுச்சேரி உள்ளிட்ட யூனியன் பிரதேசங்களிலும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணி (எஸ்.ஐ.ஆர்.) நடந்து வருகிறது.





குறிப்பாக தமிழகத்தில் கடந்த 2002-ம் ஆண்டுக்கு பிறகு தற்போதுதான் இந்த பணி நடக்கிறது. 1.1.2026 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, இறந்த வாக்காளர்களின் பெயர்கள், இரட்டை பதிவில் உள்ளவர்களை நீக்கவும் தேர்தல் கமிஷன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர். களப்பணிகள் கடந்த நவம்பர் 4-ம் தேதி தொடங்கின. இந்த பணியின்போது வீடுவீடாக சென்று கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வழங்கினர். அந்த படிவங்களை பூர்த்தி செய்ததும் அவற்றை வாங்கி இணையதளத்தில் பதிவேற்றம் செய்கின்றனர்.

இந்தப்பணிகள் கடந்த 4-ம் தேதி முடிவடைவதாக முதலில் அறிவிக்கப்பட்டு இருந்தது. பின்னர் அந்த தேதியை 11-ம் தேதி வரை நீட்டித்து தேர்தல் கமிஷன் அறிவித்து இருந்தது. எஸ்.ஐ.ஆர். பணிகள் நடைபெறும் மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டபடி, இந்த பணிகளுக்கான கால அளவை தேர்தல் ஆணையம் மேலும் நீட்டித்தது. அதன்படி தமிழகத்தில் வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்களை வழங்கி பதிவேற்றம் செய்யும் பணிக்கான கால அளவை 14-ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டது.

இந்நிலையில் தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி தொடர்பான எஸ்.ஐ.ஆர். படிவங்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாள் ஆகும். கடைசி நாளான நாளை எஸ்.ஐ.ஆர். படிவம் சமர்ப்பிக்கப்பட்டதும் 19-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிடுகிறது.

### பார்லி., தாக்குதல் தினம்: டெல்லி நினைவிடத்தில்

# துணை ஜனாதிபதி, பிரதமர் மோடி மரியாதை

டெல்லி, டிச. 14-

**பாராளுமன்ற தாக்குதல் நினைவு தினமான நேற்று பாராளுமன்றத்தில் அமைக்கப்பட்ட நினைவிடத்தில் பிரதமர் மோடி, துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் உள்பட பலரும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.**



**2001-ம் ஆண்டு பாராளுமன்ற தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து பிரதமர் மோடி ஆறுதல் தெரிவித்தார்.**

டெல்லியில் அமைந்துள்ள பாராளுமன்ற கட்டிடம் மீது கடந்த 2001ம் ஆண்டு டிசம்பர் 13ம் தேதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாதிகள் 5 பேர் நடத்திய இந்த தாக்குதலில் போலீசார், பாதுகாப்புப்படையினர் உள்பட 9 பேர் உயிரிழந்தனர். பதில் தாக்குதலில் 5 பயங்கரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த நிகழ்வு வருடந்தோறும் பாராளுமன்ற தாக்குதல் நினைவு தினமாக அனுசரிக்கப்படுகிறது. அந்த வகையில் தாக்குதலில் வீர மரணடைந்தவர்களுக்கு பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள், எம்.பி.க்கள், எதிர்க்கட்சி தலைவர்கள் ராகுல் காந்தி, சோனியா காந்தி உள்பட மூத்த தலைவர்கள் மரியாதை செலுத்தினர். தாக்குதல் நினைவாக பாராளுமன்றத்தில் அமைக்கப்பட்ட நினைவிடத்தில் பிரதமர் மோடி, துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் உள்பட பலரும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

### கேரள மாநில உள்ளாட்சி தேர்தல்:

# காங்கிரஸ் தலைமையிலான யு.டி.எப். பெரும்பாலான இடங்களில் வெற்றி

## திருவனந்தபுரம் மாநகராட்சியை பா.ஜ.க. கைப்பற்றியது

திருவனந்தபுரம், டிச. 14-

**கேரள மாநிலத்தில் நடந்த உள்ளாட்சி தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி அதிக இடங்களை கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது. திருவனந்தபுரம் மாநகராட்சியை பா.ஜ.க. கைப்பற்றியுள்ளது.**

கேரளாவில் உள்ள 1,199 உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று காலை 8 மணிக்குத் தொடங்கியது. மாநில தேர்தல் ஆணையத்தின் தரவுகளின்படி, ஆளும் எல்.டி.எப்.-ஐ விட அதிக கிராம மற்றும் வட்டாரப் பஞ்சாயத்துகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் காங்கிரஸ் தலைமையிலான யு.டி.எப். வெற்றிப்பெற்றுள்ளது.

மாநில தேர்தல் ஆணையம் பகிர்ந்துகொண்ட நிலவரங்களின்படி, ஆளும் எல்.டி.எப். 366 மற்றும் யு.டி.எப். 473 கிராம பஞ்சாயத்துகளில் வெற்றிப்பெற்றன. யு.டி.எப். 55 நகராட்சிகள், 8 மாவட்ட பஞ்சாயத்துகள், 81 பிளாக் பஞ்சாயத்துகள் மற்றும் 4 மாநகராட்சிகளிலும் வெற்றிவாகை சூடியுள்ளது.

அதே நேரத்தில், எல்.டி.எப். 28 நகராட்சிகள், 6 மாவட்ட பஞ்சாயத்துகள், 65 பிளாக் பஞ்சாயத்துகள் மற்றும் ஒரு மாநகராட்சியில் மட்டும் வெற்றிப்பெற்றுள்ளது. பா.ஜ.க. தலைமையிலான என்.டி.ஏ. 26 கிராம பஞ்சாயத்துகள், 2 நகராட்சி மற்றும் ஒரு மாநகராட்சியில் வெற்றிப் பெற்றன.

திருவனந்தபுரம் மாநகராட்சியில் பா.ஜ.க. தலைமையிலான என்.டி.ஏ. பெரும்பான்மை எண்ணிக்கையை நெருங்கி வெற்றிப்பெற்றுள்ளது. 101 இடங்களைக் கொண்ட மாநகராட்சியில் என்.டி.ஏ. 49 இடங்களிலும், எல்.டி.எப். 28 இடங்களிலும், யு.டி.எப். 19 வார்டுகளிலும் வெற்றிப்பெற்றுள்ளன.

மாநகராட்சி மன்றத்தில் பெரும்பான்மையைப் பெற என்.டி.ஏ.-க்கு 51 இடங்கள் தேவை. இதனால் திருவனந்தபுரம் மாநகராட்சியில் வெற்றி பெற்ற இரண்டு சுயேச்சைகள் மீது அனைவரின் கவனமும் திரும்பியுள்ளது.

# டெல்டா மாவட்டங்களில் இன்று மழை

சென்னை, டிச. 14-

**இன்று டெல்டா மாவட்டங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று தென்தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படும்.

15-ம் தேதி முதல் 19-ம் தேதி வரை தென் தமிழகம் மற்றும் கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். இதனிடையே இன்று முதல் 15-ம் தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் குறைந்த பட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2-3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட குறைவாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 29 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்த பட்ச வெப்பநிலை 21 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
| --- | --- |
| 449.53 | 148.40 |
| பாயின்ட் 85,267.66 | பாயின்ட் 26,046.95 |




**தங்கம்**
1 சவரன் ₹98,960
1 கிராம் ₹12,370



**வெள்ளி**
1 கிலோ ₹210,000
1 கிராம் ₹210.00

**டாலர்** ₹90.58

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# தாய்லாந்து-கம்போடியா இடையே மீண்டும் போர் நிறுத்த உடன்பாடு

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தகவல்

**நியூயார்க், டிச. 14-**

தாய்லாந்து-கம்போடியா இடையே மீண்டும் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.



தென்கிழக்கு ஆசிய நாடுகளான கம்போடியா, தாய்லாந்து இடையே எல்லை பிரச்சினை இருந்து வருகிறது. கடந்த ஜூலை மாதம் இரு நாட்டு ராணுவங்கள் இடையே மோதல் ஏற்பட்டு போர் வெடித்தது. இதில் இரு தரப்பிலும் சேர்த்து 48 பேர் உயிரிழந்தனர். அதன் பின் அமெரிக்க அதிபர் ட்ரம்பின் மத்தியஸ்த்தால் இரு நாடுகள் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதற்கிடையே கடந்த 8-தேதி தாய்லாந்து-கம்போடியா இடையே மீண்டும் மோதல் ஏற்பட்டது. இருதரப்பும் எல்லையில் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இந்த நிலையில் தாய்லாந்து-கம்போடியா இடையே மீண்டும் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இது தொடர்பாக ட்ரம்ப் கூறியதாவது:- தாய்லாந்து பிரதமர் அனுடின் சார்ன்-விரகுல், கம்போடிய பிரதமர் ஹுன் மானெட் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். மோதல் தொடர்பாக மலேசியாவின் பிரதமர் அன்வர் இப்ராஹிமின் உதவியுடன் ஆலோசனை நடத்தினேன்.

இதன் பயனாக தாய்லாந்து-கம்போடியா நாடுகள் மீண்டும் போர் நிறுத்தம் செய்ய சம்மதித்துள்ளன. இரு நாடுகளும் அமைதிக்குத் தயாராக உள்ளன. 2 நாடுகளுக்கு இடையே ஒரு பெரிய போராக உருவாகி இருக்கக்கூடியதைத் தீர்ப்பதில் பணியாற்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்த மரியாதை ஆகும் என்றார்.

## 2 ஆண்டுகளுக்கு பிறகு

# இஸ்ரேல்-பொலிவியா தூதரக உறவு மீண்டும் தொடங்கியது

**சுக்ரே, டிச. 14-**

2 ஆண்டுகளுக்கு பிறகு இஸ்ரேல்-பொலிவியா தூதரக உறவு மீண்டும் தொடங்கியுள்ளது. தூதரக உறவை மீண்டும் தொடங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் இஸ்ரேல்-பொலிவியா அமைச்சர்கள் கையெழுத்திட்டனர்.

இஸ்ரேல்-காசா போர் கடந்த 2023-ம் ஆண்டு தொடங்கியது. இந்த போரில் உலக நாடுகள் பலவும் காசாவுக்கு ஆதரவு தெரிவித்தன. அதன் ஒரு பகுதியாக 2 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேல் உடனான தூதரக உறவை பொலிவியா முறித்து கொண்டது. மேலும் அப்போதைய அதிபர் எவோ மோராலஸ் அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டவர். எனவே அமெரிக்கா உடனான தூதரக உறவை துண்டித்து ஈரானுடன் நட்புறவை வளர்த்து கொண்டது.

இந்த சூழலில் கடந்த அக்டோபர் மாதம் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது. இதில் வலதுசாரி கட்சி வெற்றி பெற்று ரொட்ரிகோ பாஸ் அதிபராக தேர்வு செய்யப்பட்டார். அவர் அமெரிக்கா, இஸ்ரேல் உடனான தூதரக உறவை மீண்டும் புதுப்பிக்க முடிவு செய்தார். அதன்படி இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் அமெரிக்கா தலைநகர் வாஷிங்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது தூதரக உறவை மீண்டும் தொடங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் அவர்கள் இருவரும் கையெழுத்திட்டனர். இதன்மூலம் இஸ்ரேல்-பொலிவியா இடையே புதிய பொருளாதார வாய்ப்புகள் திறக்கப்படும் என அவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# தங்கம் விலையில் மாற்றமில்லை

**சென்னை, டிச. 14-**

சென்னையில் நேற்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலையில் மாற்றம் இல்லை. ஒரு சவரன் ரூ.98 ஆயிரத்து 960-க்கு விற்பனையானது. தங்கம் விலை ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 370-க்கு விற்பனையானது. வெள்ளி விலை நேற்று சற்று குறைந்து விற்பனையானது.

தங்கம் விலை மீண்டும் உச்சம் தொட்டு வருகிறது. கடந்த ஆண்டு (2024) மார்ச் மாதம் ஒரு சவரன் தங்கம் ரூ.50 ஆயிரத்தை எட்டியதும், 'என்னது 50 ஆயிரம் ரூபாயை தங்கம் தொட்டுவிட்டதா?' என திகைக்கும் அளவுக்கு விலை உயர்ந்து இருந்தது. அதன்பிறகு விலை கொஞ்சம்கூட குறையவில்லை. அவ்வாறு விலை உயர்ந்து வந்து, நடப்பு ஆண்டு ஜனவரி மாதம் 22-ந் தேதி ரூ.60 ஆயிரம் என்ற நிலையையும் கடந்தது.

கடந்த ஆண்டில் இருந்த உயர்வை காட்டிலும், நடப்பாண்டில் தங்கம் விலை, ராக்கெட், ஜெட் என இன்னும் நொடிப்பொழுதில் வேகம் எடுக்கக்கூடிய எதனுடனும் ஒப்பிடும் அளவுக்கு இருக்கிறது. கடந்த அக்டோபர் மாதம் 17-ந் தேதி ஒரு சவரன் ரூ.97 ஆயிரத்து 600-க்கும் விற்கப்பட்டது. இது அப்போது புதிய உச்சமாக இருந்தது. அந்தநேரத்தில் ஒரு சவரன் ரூ.1 லட்சத்தை விரைவில் தாண்டிவிடும் என்று சொல்லும் அளவுக்கு விலை அதிகரித்தபடியே இருந்தது. ஆனால் அதன் விலையில் இடையில் சற்று சரிவு ஏற்பட்டது. அவ்வாறு விலை குறைந்து வந்து, ஒரு சவரன் ரூ.89 ஆயிரத்து 440-க்கு கடந்த மாதம் (நவம்பர்) 5-ந் தேதி விற்பனை ஆனது. இப்படியே விலை குறைந்தால் நன்றாக இருக்குமே என மக்கள் நினைத்த நேரத்தில், மீண்டும் விலை ஏறத்தொடங்கியது.

அதிலும் இம்மாதம் தொடக்கத்தில் இருந்து பழையபடி விலை 'கிடுகிடு'வென உயர ஆரம்பித்தது. தொடர்ந்து உயர்ந்து வந்த தங்கம் இம்மாத தொடக்கத்தில் ரூ.96 ஆயிரத்தையும் தாண்டியது. தொடர்ச்சியாக ரூ.96 ஆயிரத்துக்கு கீழ் குறையாமல் விற்பனை ஆனது.

நேற்று முன்தினம் தங்கம் விலை அதிரடியாக உயர்ந்து காணப்பட்டது. கடந்த 3 நாட்களுக்கு முன் ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 50-க்கும், ஒரு சவரன் ரூ.96 ஆயிரத்து 400-க்கும் விற்பனை ஆனது. நேற்று முன்தினம் காலை நிலவரப்படி, கிராமுக்கு ரூ.200-ம், சவரனுக்கு ரூ.1,600-ம், பிற்பகல் நிலவரப்படி மேலும் கிராமுக்கு ரூ.120-ம், சவரனுக்கு ரூ.960-ம் என மொத்தம் ஒரே நாளில் கிராமுக்கு ரூ.320-ம், சவரனுக்கு ரூ.2,560-ம் அதிகரித்து, ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 370-க்கும், ஒரு சவரன் ரூ.98 ஆயிரத்து 960-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதே நிலை தொடர்ந்தால், இந்த ஆண்டு இறுதிக்குள் ஏன், ஓரிரு நாட்களிலேயே ஒரு சவரன் தங்கம் ரூ.1 லட்சம் என்ற இமாலய உச்சத்தையும் எட்டிவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தநிலையில் சென்னையில் நேற்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலையில் மாற்றம் இல்லை. ஒரு சவரன் ரூ.98 ஆயிரத்து 960-க்கு விற்பனையானது. தங்கம் விலை ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 370-க்கு விற்பனையானது. வெள்ளி விலை நேற்று சற்று குறைந்து விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.6 குறைந்து ரூ.210-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ வெள்ளி ரூ.2 லட்சத்து 10 ஆயிரம் ஆக விற்பனையானது.

**தங்கம் விலை நிலவரம்:**

1) 13-12-2025- ஒரு பவுன் (22 காரட்) ரூ.98,960.
2) 12-12-2025- ஒரு பவுன் (22 காரட்) ரூ.98,960.
3) 11-12-2025- ஒரு பவுன் (22 காரட்) ரூ.96,400.
4) 10-12-2025- ஒரு பவுன் (22 காரட்) ரூ.96,240.
5) 09-12-2025- ஒரு பவுன் (22 காரட்) ரூ.96,000.

**வெள்ளி விலை நிலவரம்:**

1) 13-12-2025- ஒரு கிராம் ரூ.210.
2) 12-12-2025- ஒரு கிராம் ரூ.216.
3) 11-12-2025- ஒரு கிராம் ரூ.209.
4) 10-12-2025- ஒரு கிராம் ரூ.207.
5) 09-12-2025- ஒரு கிராம் ரூ.199.

## 'கோல்டு கார்டு' விசா திட்டத்துக்கு எதிர்ப்பு:

# அமெரிக்காவின் 20 மாகாணங்கள் மத்திய நீதிமன்றத்தில் வழக்கு

**வாஷிங்டன், டிச. 14-**

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கடந்த புதன் கிழமை அறிமுகப்படுத்திய கோல்டு கார்டு விசா திட்டத்துக்கு தடை கோரி கலிஃபோர்னியா, நியூயார்க் உள்பட 20 மாகாணங்கள் வழக்கு தொடர்ந்துள்ளன.

அமெரிக்காவில் உள்ள பெருநிறுவனங்கள், திறன் மிகு வெளிநாட்டுப் பணியாளர்களை எச்1பி விசா மூலம் தங்கள் நிறுவனத்தில் பணியமர்த்தி வந்தன. இந்த விசாவுக் கான கட்டணம் ரூ. 1, 80,000 (2,000 அமெரிக்க டாலர்) முதல் ரூ. 4,52,000 (5 ,000 அமெரிக்க டாலர்) வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், ரூ.9 கோடியில் (10 லட்சம் அமெரிக்க டாலர்) அமெரிக்க குடியுரிமை பெறும் கோல்டு கார்டு விசா திட்டத்தை அதிபர் டொனால்டு ட்ரம்ப், வாஷிங்டனில் கடந்த புதன் கிழமை தொடங்கிவைத்தார்.

டொனால்டு ட்ரம்ப்பின் இந்த திட்டத்தை எதிர்த்து கலிஃபோர்னியா, நியூயார்க், மாசசூசெட்ஸ், இல்லினாய்ஸ், நியூ ஜெர்சி, வாஷிங்டன் உள்ளிட்ட மாகாணங்கள் பாஸ்டனில் உள்ள மத்திய நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளன.

அவர்கள் தாக்கல் செய்துள்ள மனுக்களில் கூறப்பட்டிருப்பதாவது: எச்1பி விசா கட்டணம் 2,000 டாலர் முதல் 5,000 டாலர் வரை இருந்த நிலையில், தற்போதைய கோல்டு கார்டு திட்டத்தால் கட்டணங்கள் பல மடங்கு உயர்கின்றன. இவ்வாறு கட்டணத்தை விதிக்கும் அதிகாரம் அதிபருக்கு கிடையாது. இது மத்திய சட்டத்தை மீறும் செயல். விசா நடைமுறைகளை நிர்வகிப்பதற்கான செலவை ஈடு செய்யத் தேவையான கட்டணங்களை மட்டுமே குடியேற்ற அதிகாரிகள் வசூலிக்க முடியும்.

எச்1பி விசா திட்டம், அமெரிக்க நிறுவனங்கள் சிறப்புத் துறைகளில் வெளிநாட்டு ஊழியர்களைப் பணியமர்த்த அனுமதிக்கிறது. கலிஃபோர்னியாவில் தங்கள் தலைமையகத்தை அமைத்துள்ள பெரும்பாலான தொழில்நுட்ப நிறுவனங்கள், எச்1பி விசா பெறும் ஊழியர்களை பெரிதும் சார்ந்துள்ளது. கோல்டு கார்டு விசாவுக்கு ஒரு மில்லியன் டாலர் கட்டணம் நிர்ணயிப்பது கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு போன்ற முக்கிய சேவைகளை வழங்குபவர்களுக்கு தேவையற்ற நிதிச் சுமையை உருவாக்கும். மேலும், இது தொழிலாளர் பற்றாக்குறையை மோசமாக்கி, சேவைகளை பாதிக்கும் அச்சுறுத்தல் உள்ளது. இவ்வாறு அந்த மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டெல்டா பாசனத்திற்கு

# மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு மேலும் அதிகரிப்பு

**மேட்டூர், டிச. 14-**


மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 8 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு கடந்த சில வாரங்களாக படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. கடந்த 10-ந் தேதி அணையில் இருந்து பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இந்த நிலையில் டெல்டா பகுதிகளில் பாசனத்திற்கு தண்ணீர் தேவை மேலும் அதிகரித்துள்ளது.

இதனை கருத்தில் கொண்டு நேற்று முன்தினம் மதியம் முதல் டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கால்வாய் பாசனத்திற்கு தொடர்ந்து வினாடிக்கு 400 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவை விட நீர்வரத்து வினாடிக்கு 2,432 ஆயிரம் கனஅடியாக குறைந்துள்ளது. இதனால் மேட்டூர் அணை நீர்மட்டம் படிப்படியாக குறைந்து நேற்று நிலவரப்படி அணை நீர்மட்டம் 115.77 அடியாக இருந்தது.

**14-12-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** செயல்பாடுகளின் தீவிரத்தால், செல்வ வளம் பெருகும். தொழிலில் புதிய திட்டங்களை அமுல் படுத்தினால் இலாபம் அதிகரிக்கும். அழகுப் பெண்களின் சிநேகமும், அழகான தனிவீடும் அமையும்.

**ரிஷபம்:-** மதிப்பு, மரியாதை குறையும்படியான காரியங்களில் ஈடுபடுவதைத் தவிருங்கள். விபத்து ஏற்படாதிருக்க பயணத்தின் போது எச்சரிக்கை தேவை. மனஅமைதி பெற தியானம் செய்க.

**மிதுனம்:-** தொழில்,வியாபாரத்தில் சறுக்கல்கள் ஏற்படலாம். எச்சரிக்கை தேவை. தாயின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. தன்னம்பிக்கையே வெற்றிக்கு மருந்தாகும்.

**கடகம்:-** மனைவியின் ஒத்துழைப்பு மனதில் மட்டிலாத மகிழ்ச்சி அளிக்கும். எந்தவொரு காரியம் செய்தாலும் வெற்றி பெற்றுப் பல வழிகளிலும் வருமானம் பெருகும்.

**சிம்மம்:-** நல்ல வருமானம் வருவது போல் தோற்றமளிக்கும். வரும் ஆனா வராது. தொழில், வியாபாரத்தில் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். பதவி அல்லது இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**கன்னி:-** பணவரவில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கடின உழைப்பால் உற்பத்தி பெருகி தொழிலும் அபிவிருத்தியாகி, இலாபம் அதிகரிக்கும். எதையும் துணிச்சலோடு எதிர்கொள்வீர்கள்.

**துலாம்:-** வீட்டில் பெண்களால் தேவையற்ற செலவுகள் ஏற்படும். வாழ்க்கையில் புதிய எதிர்மறையான திருப்பங்கள் ஏற்படலாம். குறிக்கோளின்றி மனம் போன போக்கில் அலைய நேரும்.

**விருச்சிகம்:-** பல வழிகளிலும் தனலாபம் அதிகரிக்கும். எல்லாவகையிலும் நன்மை ஏற்படும். கௌரவம், மரியாதை கூடும். பெண்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும். பிரிந்திருந்தவர் கூடி மகிழ்வர்.

**தனுசு:-** எண்ணிய காரியங்கள் எண்ணியபடி நடந்து ஏற்றம் வரும். வாழ்க்கையில் நல்ல புதிய திருப்பங்கள் ஏற்படும். பிறருக்குக் கட்டளை இடும்படியான அதிகாரமுள்ள அரசு உயர்பதவிகள் கிடைக்கும்.

**மகரம்:-** தெய்வீக காரிய ஈடுபட்டால், எல்லாவற்றிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். காரியம் யாவினும் கைகொடுக்கும், மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். புனிதப் பயணங்களால் இன்பம் பெருகும்.

**கும்பம்:-** எதிலும் நியாயமாக நடக்க முயலுங்கள். வாழ்க்கையில் உயர்வு வரும்போது பணிவும் வரவேண்டும். பணியிடத்தில் அதிகாரிகளை அனுசரித்து நடந்தால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

**மீனம்:-** செல்வநிலை உயர்ந்து புதிய வாகனங்களை வாங்கும் யோகம் ஏற்படும். புதிதாகக் காதல் மலர்ந்து களிப்புத் தரும். எல்லா வளமும் பெருகி பெரிய மனிதன் எனப் பெயர் எடுப்பீர்கள்.

# ரசாயன ஆயுதங்களால் தாக்குதல்: உக்ரைன் மீது ரஷ்யா குற்றச்சாட்டு

**கீவ், டிச. 14-**

ரசாயன ஆயுதங்களை 600 முறை பயன்படுத்திய உக்ரைன் மீது ரஷ்யா குற்றச்சாட்டியுள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரானது 2022-ம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. ஏறக்குறைய போரானது 3-ம் ஆண்டை கடந்தும் தொடர்ந்து வருகிறது. அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளின் ஆதரவை உக்ரைன் கோரி வருகின்றது. இதற்கேற்ப, அந்நாடுகளும் ஆயுத மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன.

ரஷ்யாவுக்கு வடகொரியாவும் ராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்கிறது என கூறப்படுகிறது. தொடர்ந்து நடந்து வரும் போரின் ஒரு பகுதியாக சமீபத்தில், ரஷ்யாவின் எண்ணெய் கப்பல் மற்றும் எண்ணெய் களம் ஆகியவற்றின் மீது உக்ரைன் கடுமையான தாக்குதலில் ஈடுபட்டது. இது ரஷ்யாவின் நிதி நிலைமையை சீர்குலைக்கும் நோக்கில் நடத்தப்படுகிறது.

இந்த நிலையில், ராணுவ நடவடிக்கைகளில் உக்ரைன் ரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி உள்ளது என ரஷ்யா பரபரப்பு குற்றச்சாட்டை கூறியுள்ளது. அந்நாட்டின் உயரதிகாரியான அலெக்சி டிஸ்சேவ் செய்தியாளர்களிடம் கூறும்போது, குளோரோபிக்ரின், சி.எஸ். வாயு, பிரஸ்சிக் அமிலம் உள்பட பல வேறு ரசாயன பொருட்களை கொண்டு 600-க்கும் மேற்பட்ட முறை உக்ரைன் தாக்குதலில் ஈடுபட்டு உள்ளது. படுகொலை முயற்சிகளிலும் ஈடுபட்டு உள்ளன.

உக்ரைனில் உள்ள ரசாயன மற்றும் அணு ஆயுத அமைப்புகளுக்கும் கூட அச்சுறுத்தல்கள் உள்ளன என குறிப்பிட்ட அவர், அவை தீங்கு விளைவிக்கும் ஆபத்துகளும் உள்ளன என கூறினார். ரசாயன ஆயுத தாக்குதலுக்காக ஆளில்லா விமானங்கள், வெடிபொருட்களையும் உக்ரைன் பயன்படுத்தியது. தீங்கு ஏற்படுத்தும் தலங்களை உக்ரைனின் உயரதிகாரிகள் தவறாக பயன்படுத்தி உள்ளனர் என்றும் அவர் குற்றச்சாட்டாக கூறினார்.

## அமெரிக்காவில் பட்டம் பெற்ற

# மாணவர்கள் அவர்கள் நாட்டுக்கே செல்ல வேண்டும்: அதிபர் ட்ரம்ப்

**வாஷிங்டன், டிச. 14-**

அமெரிக்காவில் பட்டம் பெற்ற பிறகு இந்தியா, சீனா உள்ளிட்ட வெளிநாட்டு மாணவர்கள் நாடு திரும்ப வேண்டியிருப்பது அவமானம் என அமெரிக்க அதிபர் கொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் பேசிய அமெரிக்க அதிபர் ட்ரம்ப், "உலகின் சிறந்த மாணவர்களில் சிலருக்கு அமெரிக்கா கல்வி அளித்துவிட்டு, பட்டப்படிப்பை முடித்தவுடன் அவர்களைத் திருப்பி அனுப்புகிறது. நீங்கள் அமெரிக்காவில் உள்ள கல்லூரியில் பட்டம் பெறுகிறீர்கள், பிறகு நீங்கள் இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும், சீனாவுக்குத் திரும்ப வேண்டும், பிரான்ஸுக்குத் திரும்ப வேண்டும். அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே திரும்ப வேண்டும். இங்கு தங்குவது மிகவும் கடினம். இது ஒரு அவமானம்.

அமெரிக்காவின் தலைசிறந்த கல்லூரிகளில் இருந்து வரும் நபர்களை நிறுவனங்களால் வேலைக்கு அமர்த்த முடிவதில்லை.

விசா நிச்சயமற்ற தன்மை காரணமாக, உயர்தரப் பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் சிறந்த சர்வதேசப் பட்டதாரிகளைத் தக்கவைத்துக்கொள்ள அமெரிக்க நிறுவனங்கள் சிரமப்படுகின்றன.

நல்ல கல்வித் தகுதிகள் இருந்தபோதிலும், சிறப்பாகச் செயல்படும் பல பட்டதாரிகள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். வெளிநாட்டிலிருந்து வந்து படிக்கும் மாணவர்கள் சிலர் கல்லூரியில் முதலிடம் பெறுகிறார்கள், ஆனால் அவர்கள் நாட்டில் தங்குவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மாணவர்கள் தங்கள் படிப்பை முடித்த பிறகு பெரும்பாலும் வெளியே தூக்கி எறியப்படுகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

# உக்ரைன் துறைமுகங்கள் மீது ரஷ்யா தாக்குதல்-2 பேர் பலி

**கீவ், டிச. 14-**

உக்ரைன் துறைமுகங்கள் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் 2 பேர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் , ரஷ்யா இடையே நேற்று 1 ஆயிரத்து 388வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். அதன்படி, போர் நிறுத்தம் தொடர்பாக 28 நிபந்தனைகள் கொண்ட உடன்படிக்கையை டிரம்ப் முன்மொழிந்துள்ளார். இந்த நிபந்தனைகளில் சிலவற்றை ஏற்க உக்ரைன் மறுத்து வருகிறது. இதனால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், உக்ரைனில் உள்ள துறைமுகங்கள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியது. உக்ரைனின் ஒடிசா மாகாணத்தில் கருங்கடல் பகுதியில் அமைந்துள்ள குரோனொமொர்க், ஒடிசா ஆகிய 2 துறைமுகங்கள் மீது டிரோன்கள், ஏவுகணைகள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பல்கள் கடும் சேதமடைந்தன.

குறிப்பாக, குரோனொமொர்க் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துருக்கி நாட்டின் 3 கப்பல்கள் சேதமடைந்தன. இந்த கப்பல்கள் உணவு தானியங்களை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டு வந்தன என்று உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேவேளை, துறைமுகங்களில் நடத்தப்பட்ட தாக்குதலில் 2 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

# நயினார் நாகேந்திரன் திடீர் டெல்லி பயணம்

**சென்னை, டிச. 14-**

எடப்பாடி பழனிசாமியை நயினார் நாகேந்திரன் சந்தித்து பேசிய நிலையில் நேற்று டெல்லி சென்றார்.

தொகுதி பங்கீடு மற்றும் ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரனை தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைப்பது குறித்து விவாதிப்பார் என்று கூறப்படுகிறது. பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று டெல்லிக்கு புறப்பட்டு சென்றார்.

கடந்த 3 நாட்களுக்கு முன் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை நயினார் நாகேந்திரன் சந்தித்து பேசிய நிலையில் நேற்று டெல்லிக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

டெல்லிக்கு செல்லும் நயினார் நாகேந்திரன், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா மற்றும் பா.ஜ.க. மேலிட தலைவர்களை சந்தித்து தொகுதி பங்கீடு மற்றும் ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரனை தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைப்பது குறித்து விவாதிப்பார் என்று கூறப்படுகிறது.

மேலும் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அஞ்சலை தலை வெளியீட்டு விழாவிலும் நயினார் நாகேந்திரன் பங்கேற்கிறார்.

# அந்தமானில் நிலநடுக்கம்

**புதுடெல்லி, டிச. 14-**

அந்தமானில் நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் அருகே நேற்று லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 11.48 மணியளவில் ரிக்டர் அளவில் 4.4 ஆக நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 15 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 12.59 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 92.34 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்த வித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

# முதியவர்களை குறிவைத்து மோசடி: அமெரிக்காவில் இந்தியருக்கு சிறை

**வாஷிங்டன், டிச. 14-**

அமெரிக்காவில் முதியவர்களை குறிவைத்து ரூ.62 கோடி மோசடி செய்த இந்தியருக்கு ஏழரை ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணத்தில் வசித்து வருபவர் லிக்னேஷ் குமார் பட்டேல் (வயது 38). இந்தியரான அவர் முதியவர்களை குறிவைத்து மோசடியில் ஈடுபட்டு வந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. அதன் பேரில் எட்வர்ட்ஸ்வில் நகர போலீசார் அவரை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தினர்.

விசாரணையில் கொரியர் நிறுவனத்தில் பணிபுரிபவர் போல முதியவர்களின் வீடுகளில் புகுந்து அங்கிருந்து பணம், நகை போன்றவற்றை திருடியது தெரிய வந்தது.

இதன்மூலம் சுமார் ரூ.62 கோடி அளவுக்கு அவர் மோசடி செய்தது உறுதியானது. எனவே லிக்னேஷ்குமாருக்கு ஏழரை ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது.

# மதுரையில் வரும் 17-ம் தேதி அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



**சென்னை, 14-**

மதுரை மாநகராட்சியின் நிர்வாக சீர்கேடுகளை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் வருகிற 17-ந்தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தி.மு.க. அரசு பொறுப்பேற்று கடந்த 55 மாதங்களாக, மதுரை மாநகரில் அம்மா அரசின் பொற்கால ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி திறந்ததைத் தவிர எந்தவிதமான புதிய திட்டங்களும் கொண்டுவரப்படவில்லை. குறிப்பாக, மதுரை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மதுரை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கான முன்மொழிவைக்கூட இந்த தி.மு.க. அரசு முழுமையாக வழங்கவில்லை.

வீடுகளுக்கு 100 சதவீத வரி உயர்வு, வணிக நிறுவனங்களுக்கு 150 சதவீத வரி உயர்வு மற்றும் குடிநீர் கட்டணம், குப்பை வரி ஆகியவற்றின் உயர்வால், மதுரை மாநகராட்சியின் வரி வருவாய் பலமடங்கு உயர்ந்தும், தி.மு.க. ஆட்சியில் மதுரை மாநகரில் அனைத்து வட்டங்களிலும் உள்ள சாலைகள் குண்டும் குழியுமாகக் காட்சி அளிக்கின்றன; சாலைகளில் கழிவுநீர் ஆறாக ஓடுகிறது. மதுரை மாநகர மக்களுக்கு 24 மணி நேரமும் குடிநீர் வழங்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில், எனது தலைமையிலான அம்மாவின் அரசால் அடிக்கல் நாட்டப்பட்டு, தொடங்கப்பட்ட முல்லைப் பெரியாறு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் பணிகள் முழுமையாக முடிவடையும் முன்பே, அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலை மனதில் வைத்து, முதல்-அமைச்சர் ஸ்டாலின், கடந்த வாரம் இத்திட்டத்தை அவசர கதியில் தொடங்கி வைத்தார்.

24 மணி நேரமும் மதுரை மாநகர் மக்களுக்கு குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட இத்திட்டத்தை, அவசர கதியில் தி.மு.க. அரசின் முதல்-அமைச்சர் தொடங்கி வைத்ததால், மதுரை மாநகர மக்களுக்கு, நாள் முழுவதும் குடிநீர் வழங்குவதற்கு பதில், பழையபடி குறிப்பிட்ட நேரங்களுக்கே குடிநீர் வழங்கப்படுகிறது. மதுரை மாநகர் முழுவதும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படவில்லை. மேலும், தி.மு.க.-வைச் சேர்ந்த மதுரை மாநகராட்சி மேயர், நிலைக் குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் இணைந்து, முறைகேடான வரி விதிப்பின் மூலம் சுமார் 200 கோடி ரூபாய் ஊழல் செய்துள்ளதாக, தி.மு.க. அரசின் அதிகாரிகளே கண்டறிந்து அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து, மதுரை மாநகராட்சி மேயரும், மண்டலக் குழுத் தலைவர்கள் சிலரும் ராஜினாமா செய்ததைத் தவிர, இந்த ஊழலில் திளைத்த மற்றவர்கள் மீது, இதுவரை இந்த தி.மு.க. அரசு சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

எனவே, மதுரை மாநகராட்சியின் நிர்வாக சீர்கேடுகளைக் கண்டித்தும்; முறைகேடான வரி விதிப்பில் சுமார் 200 கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றிருப்பது குறித்து முறையான விசாரணை நடைபெறாததைக் கண்டித்தும்; குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை புதுப்பிக்காத, மக்களுக்கு முறையாக குடிநீர் வழங்காத மாநகராட்சி நிர்வாகத்தையும்; இதுகுறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாத தி.மு.க. அரசையும் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மதுரை மாநகர், மதுரை புறநகர் கிழக்கு மாவட்டக் கழகங்களின் சார்பில் 17.12.2025 புதன் கிழமை காலை 10 மணியளவில், பழங்காநத்தம் ஜெயம் தியேட்டர் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக அமைப்புச் செயலாளரும், மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் ராஜூ, எம்.எல்.ஏ. தலைமையிலும்; கழக அமைப்புச் செயலாளரும், மதுரை புறநகர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான ராஜன் செல்லப்பா, எம்.எல்.ஏ., மதுரை மாநகர் மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளரும், மதுரை மேற்கு 5-ஆம் பகுதிக் கழகச் செயலாளரும், மதுரை மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவருமான சோலைராஜா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மதுரை மாநகர், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட கழகங்களைச் சேர்ந்த, தலைமைக் கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், மதுரை மாநகராட்சி மாமன்ற இந்நாள், முன்னாள் வார்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகத் திறனற்ற தி.மு.க. பெயிலியர் மாடல் ஸ்டாலின் அரசைக் கண்டித்து நடைபெற உள்ள இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், வியாபாரிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### வீட்டின் கதவை உடைத்து

# யூடியூபர் சவுக்கு சங்கரை கைது செய்த காவல்துறை

**சென்னை, டிச. 14-**

சென்னையில் பிரபல யூடியூபர் சவுக்கு சங்கரை போலீசார் கைது செய்தனர்.

பிரபல யூடியூபர் சவுக்கு சங்கர், தமிழக அரசுக்கு எதிராகவும், போலீஸ் அதிகாரிகளுக்கு எதிராகவும் பல்வேறு குற்றச்சாட்டுகளை யூடியூப் சேனல்களில் கூறி வந்தார். இதனால் அவர் மீது பல்வேறு காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கைது செய்யப்பட்ட அவர் மீது குண்டர் சட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த வழக்குகள் தொடர்பாக, உச்ச நீதிமன்றத்தில் தடையுத்தரவு மற்றும் ஜாமின் பெற்று வெளியில் வந்த அவர், மீண்டும் தனது சவுக்கு மீடியா சேனலை நடத்தி வந்தார்.

இந்நிலையில், அவர் மீதும், அவரது குழுவில் பணியாற்றுவோர் மீதும் ஆதம்பாக்கம் போலீசார், சினிமா தயாரிப்பாளர் அளித்த புகாரின் வழக்குப்பதிவு செய்து இருந்தனர். இந்த வழக்கில் அவரை கைது செய்வதற்காக, நேற்று காலை சென்னை மாநகர போலீஸ் படையினர் அவரது வீட்டை சுற்றி வளைத்தனர். வீடு உள்பக்கமாக பூட்டப்பட்டிருந்ததால் போலீசாரால் உடனடியாக கைது செய்ய முடியவில்லை. வீட்டினுள் இருந்த சவுக்கு சங்கர், தன்னை கைது செய்வதற்காக போலீசார் வந்துள்ளதாக, வீடியோ வெளியிட்டார். இதையடுத்து தீ அணைப்பு வீரர்கள் உதவியுடன் கதவை உடைத்த போலீசார் சவுக்கு சங்கரை கைது செய்தனர்.

---

### பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த

# முன்னாள் விமானப்படை அதிகாரி அசாமில் கைது

**திஸ்பூர், டிச. 14-**

பாகிஸ்தானுக்கு ரகசிய ஆவணங்களை சமூக வலைதளங்கள் வாயிலாக உளவு பார்த்த முன்னாள் இந்திய விமான படைத்தலைவர் கைது செய்யப்பட்டார்.

பாகிஸ்தானுக்கு உளவு பார்த்ததாக எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையில், அதிகாரிகள் நடத்திய தீவிர கண்காணிப்பு மற்றும் விசாரணையை தொடர்ந்து, ஓய்வுபெற்ற முன்னாள் விமானப்படை அதிகாரி குலேந்திர சர்மா அசாமில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் முக்கிய ரகசிய ஆவணங்களை சமூக வலைதளங்கள் வாயிலாக பாகிஸ்தானுக்கு பகிர்ந்துள்ளார் என முதற்கட்ட விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளது. தொடர்ந்து அசாம் போலீசார் குலேந்திர சர்மாவிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அவர் தனியாக செயல்பட்டாரா? அல்லது இதில் வேறு யாருக்கும் தொடர்பு உள்ளதா? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

---

# டெல்லியில் காற்று மாசுபாடு: மக்களின் உடல்நலம் பாதிப்பு

**புதுடெல்லி, டிச. 14-**

டெல்லியில் காற்று மாசுபாட்டால் மக்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் காற்று மாசு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சன்சாத் மார்க் பகுதியில், காற்று தர குறியீடு மிக மோசம் (356) என்ற அளவில் பதிவாகி மக்களை மிரட்டி வருகிறது. இதனை மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்ட தகவல் உறுதிப்படுத்துகிறது. காலையிலேயே பனி படர்ந்து தெளிவற்ற வானிலையும் காணப்படுகிறது. காற்று மாசுபாட்டால் மக்களின் உடல்நலத்தில் பாதிப்பு ஏற்பட்டு, சுவாச கோளாறுகளும் அதிகரித்து காணப்படுகிறது. நகரின் பல்வேறு பகுதிகளிலும் பனிப்போர்வை போத்தியது போன்று உள்ளது. இதனால், வாகனங்கள் சாலையில் முகப்பு விளக்குகளை எரிய விட்டபடியே செல்லும் நிலை காணப்படுகிறது. குளிர்காலம் தொடங்க இன்னும் சில நாட்களே உள்ள சூழலில், அதற்கு முன்பே பல பகுதிகளிலும் காலையிலேயே பனி மூட்டமும் அதிகரித்து காணப்படுகிறது.

---

# நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் திருவனந்தபுரத்தில் பா.ஜ.க. வெற்றி

## கேரள மக்களுக்கு பிரதமர் மோடி நன்றி

**திருவனந்தபுரம், டிச. 14-**

நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் திருவனந்தபுரத்தில் பா.ஜ.க. வெற்றி பெற்றதை அடுத்து கேரள மக்களுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. இதில் திருவனந்தபுரம் மாநகராட்சியில் முதல் முறையாக பா.ஜ.க. வென்றுள்ளது.

இதற்காக கேரள மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ள பிரதமர் மோடி தனது எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது;

"கேரள மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பா.ஜ.க. மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த கேரள மக்களுக்கு எனது நன்றிய தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளத்தில் யுடிஎப் மற்றும் எல்டிஎப் ஆகிய கட்சிகளால் மக்கள் வெறுப்படைந்துள்ளனர்.

எனவே, நல்லாட்சியை வழங்கவும், அனைவருக்கும் வாய்ப்புகளைக் கொண்ட கேரளத்தை உருவாக்கவும் ஒரே வழி தேசிய ஜனநாயகக் கூட்டணி மட்டுமே என்று மக்கள் தீர்மானித்தனர்.

திருவனந்தபுரம் மாநகராட்சியில் பா.ஜ.க. - தேசிய ஜனநாயக கூட்டணிக்கு கிடைத்த வெற்றி கேரள அரசியலில் ஒரு திருப்புமுனை தருணம்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை பா.ஜ.க.வால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்பதில் மக்கள் உறுதியாக உள்ளனர். திருவனந்தபுரத்தின் வளர்ச்சியை நோக்கி எங்கள் கட்சி பாடுபட்டு, மக்களின் வாழ்க்கையை எளிதாக்க ஊக்குவிக்கும்'' என்று தெரிவித்துள்ளனர்.

---

### தீப தூணில் தீபம் ஏற்றும் விவகாரம்:

# திருப்பரங்குன்றம் பகுதியில் அடையாள உண்ணாவிரதம்



**திருப்பரங்குன்றம், டிச. 14-**

திருப்பரங்குன்றம் தீப விவகாரத்தை தொடர்ந்து தீபத்தூணில் மகாதீபம் ஏற்றக்கோரி பொதுமக்கள் நேற்று அடையாள உண்ணாவிரம் இருந்தனர். இதில் 50 பேர் பங்கேற்றனர்.

மதுரை திருப்பரங்குன்றம் பகுதியைச் சேர்ந்த வக்கீல் பிரபு, மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "மதுரை திருப்பரங்குன்றம் மலை வரலாறு மிகவும் பழமையானது. திருமுருகாற்றுப்படை, பரிபாடல், அகநானூறு, மதுரைக்காஞ்சி, கலித்தொகை, தேவாரம் உள்ளிட்ட சங்க இலக்கியங்களில் திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் கோவில், குகைக்கோவிலாக பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததை உறுதிப்படுத்துகின்றன.

எனவே திருப்பரங்குன்றம் முருகன் கோவில் சுமார் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்பது உறுதியாகிறது. 1926-ம் ஆண்டு இங்கு சிவில் பிரச்சினை எழும் வரை அந்த மலையின் மீது உள்ள தீபத்தூண் பகுதியிலேயே கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டு வந்தது. அந்த நடைமுறையை பின்பற்றி இந்த ஆண்டும் தீபத்தூணில் தீபம் ஏற்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார். அந்த உத்தரவை பின்பற்றி தீபத்தூணில் தீபம் ஏற்றப்படவில்லை. எனவே திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணிலும் கார்த்திகை தீபத்தை ஏற்ற வலியுறுத்தி அமைதியான முறையில் உண்ணாவிரத போராட்டத்தை நடத்த முடிவு செய்து, இதற்காக அனுமதி கேட்டோம். ஆனால் போலீசார் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர். இது ஏற்கத்தக்கதல்ல. எனவே வருகிற 13-ந் தேதி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திருப்பரங்குன்றம் மயில் மண்டபம் அருகே அமைதியான முறையில் உண்ணாவிரத போராட்டத்தை நடத்த அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டும்" என்று அதில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஸ்ரீமதி முன்பு கடந்த 3 தினங்களுக்கு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சார்பில் வக்கீல்கள் வேலவதாஸ், கார்த்திகேய வெங்கடாஜலபதி ஆகியோர் ஆஜராகி, திருப்பரங்குன்றத்தில் போராட்டம், ஆர்ப்பாட்டத்துக்கு தடை விதித்து இருப்பதாக கூறி போலீசார் அனுமதி மறுப்பது சட்டவிரோதம் என தெரிவித்தனர். பின்னர் அரசு வக்கீல் அபுல்கலாம் ஆசாத் ஆஜராகி, திருப்பரங்குன்றம் மலை பகுதியில் சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளை காரணமாக வைத்து பொதுமக்கள் கூடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்த விவகாரத்தில் ஆதரவாகவோ, எதிர்த்தோ எந்த நடவடிக்கையிலும் யாரும் ஈடுபடக்கூடாது என தெரிவிக்கப்பட்டு உள்ளது. மனுதாரர் தரப்பினர் திருப்பரங்குன்றத்தில் இருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் உண்ணாவிரத போராட்டம் நடத்த அனுமதிக்கலாம் என தெரிவித்தார்.

அதை ஏற்க மறுத்த நீதிபதி, மனுதாரர் கோரும் இடத்திலேயே 50 பேர் மட்டும் உண்ணாவிரத போராட்டத்தில் கலந்து கொள்ளலாம். தனி நபர்களையோ, அரசியல் கட்சியினரையோ தாக்கும் வகையில் பேசக்கூடாது. கட்சி கொடிகளை பயன்படுத்தக்கூடாது. ஒரேயொரு மைக் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் உண்ணாவிரத போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்படுகிறது என உத்தரவிட்டார். இந்நிலையில் திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்ற அனுமதிக்கவில்லை எனக் கூறி அப்பகுதி மக்கள், இந்து அமைப்புகள் சார்பில் தற்போது உண்ணாவிரதம் நடைபெற்றது. உண்ணாவிரதத்திற்கு போலீசார் அனுமதி மறுத்த நிலையில், மதுரை ஐகோர்ட் நிபந்தனைகளுடன் அனுமதி அளித்துள்ளது. உண்ணாவிரதப் போராட்டத்தை அடுத்து திருப்பரங்குன்றம் பகுதியில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 50 பேர் வரை பங்கேற்றனர்.

---

# செம்பரம்பாக்கம் ஏரி முழு கொள்ளளவை எட்டியது



**சென்னை, டிச. 14-**

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான செம்பரம்பாக்கம் ஏரி முழுகொள்ளளவை எட்டி காட்டியளிக்கிறது.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றாக செம்பரம்பாக்கம் ஏரி திகழ்கிறது. குன்றத்தூரில் அமைந்துள்ள இந்த ஏரியின் மொத்த உயரம் 24 அடியாகும். ஏரியின் முழு கொள்ளளவு 3 ஆயிரத்து 645 மில்லியன் கன அடியாகும்.

இந்நிலையில், ஏரிக்கரைகள் மற்றும் மதகுகளின் பலத்தை முழுமையாகக் கண்டறியும் நோக்கில், ஏரியின் முழு கொள்ளளவான 24 அடி நீரைத் தேக்கி வைக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். அதன்படி, செம்பரம்பாக்கம் ஏரி முதல் முறையாக அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. ஏரியின் நீர் மட்டம் 24 அடியை எட்டியுள்ளது. ஏரியின் முழு கொள்ளளவான 3 ஆயிரத்து 645 மில்லியன் கன அடியை எட்டியுள்ள நிலையில் ஏரியில் இருந்து 250 கன அடி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

---

# காலி மதுபாட்டில்களை திரும்ப பெறும் திட்டம் டிச. 31க்குள் அமல்படுத்தப்படும்

## டாஸ்மாக் திட்டவட்டம்

**சென்னை, டிச. 14-**

காலி மதுபாட்டில்களை திரும்ப பெறும் திட்டம் வருகிற 31-ம் தேதிக்குள் அமல்படுத்தப்படும் என்று டாஸ்மாக் உத்தரவாதம் அளித்துள்ளது.

வனம், சுற்றுச்சூழல் உள்ளிட்ட வழக்குகளை விசாரித்து வரும் ஐகோர்ட்டு நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரதசக்கரவர்த்தி ஆகியோர் கொண்ட சிறப்பு டிவிசன் பெஞ்ச், ஊட்டி, கொடைக்கானல், மேகமலை உள்ளிட்ட மலை பகுதிகளில் காலி மதுபாட்டில்களை திரும்ப பெறும் திட்டத்தை அமல்படுத்தும்படி டாஸ்மாக் நிர்வாகத்துக்கு உத்தரவிட்டது. பின்னர் மாநிலம் முழுவதும் இந்த திட்டத்தை அமல்படுத்த உத்தரவிட்டது.

இந்தநிலையில், இதுதொடர்பான வழக்கு சென்னை ஐகோர்ட்டு நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்கரவர்த்தி ஆகியோர் கொண்ட சிறப்பு டிவிசன் பெஞ்சில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது டாஸ்மாக் சார்பில் வக்கீல் கே.சதீஷ்குமார் ஆஜராகி, "காலி மதுபாட்டில்களை திரும்ப பெறும் திட்டம் ஏற்கனவே 22 மாவட்டங்களில் அமல்படுத்தி விட்டோம். தற்போது, காஞ்சீபுரம் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் பாதி அளவு அமல்படுத்தியுள்ளோம். மீதமுள்ள மாவட்டங்கள் என்று தமிழ்நாடு முழுவதும் வருகிற 31-ம் தேதிக்குள் அனைத்து மாவட்டங்களிலும் இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டு விடும் என்று உறுதி அளிக்கிறோம் என்று கூறினார்.

இந்த திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து டாஸ்மாக் ஊழியர் மாநில சம்மேளனம் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு மனுவில், "டாஸ்மாக் மதுக்கடையில் பணியாற்றும் ஊழியர்கள் தொகுப்பூதியம் அடிப்படையில் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள். காலி மதுபாட்டில்களை திரும்ப பெறுவது, அதற்கான பணத்தை திருப்பிக் கொடுப்பது போன்ற கூடுதல் வேலை செய்யவேண்டியதுள்ளது. எனவே, இந்த பணிக்காக கூடுதல் ஊழியர்களை நியமிக்க டாஸ்மாக் நிர்வாகத்துக்கு உத்தரவிட வேண்டும்.

இந்த வழக்கில் எங்களை ஒரு மனுதாரராக சேர்க்க வேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், "காலி மதுபாட்டில்களை திரும்ப பெறும் திட்டத்துக்காக கூடுதல் ஊழியர்களை டாஸ்மாக் நிர்வாகம் நியமிக்கவேண்டும்" என்று கூறினர். மேலும், வருகிற 31-ம் தேதிக்குள் அனைத்து மாவட்டங்களிலும் காலி மதுபாட்டில்கள் திரும்ப பெறும் திட்டம் அமல்படுத்தப்படும் என்று டாஸ்மாக் நிர்வாகம் கூறிய உத்தரவாதத்தை பதிவுச்செய்துக் கொண்டு, விசாரணையை 2026-ம் ஆண்டு ஜனவரி 23-ம் தேதிக்கு தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

---

# 'ஆபரேஷன் சிந்தூர்' தொடர்கிறது: முப்படை தலைமை தளபதி தகவல்

**ஐதராபாத், டிச. 14-**

நடவடிக்கைகளின் தீவிரம் குறைந்திருக்கலாம்; ஆனாலும் ஆபரேஷன் சிந்தூர் தொடர்கிறது என்று முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சவுகான் தெரிவித்துள்ளார்.

தெலங்கானா தலைநகர் ஹைதராபாத்தில் உள்ள விமானப்படை அகாடமியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த பட்டமளிப்பு அணிவகுப்பு விழாவில் ஜெனரல் அனில் சவுகான் கலந்து கொண்டார்.

விமானப் பயிற்சி அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய அனில் சவுகான், "இங்கு தவறு செய்வதற்கான வாய்ப்பு பூஜ்ஜியம். மேலும், அலட்சியத்தின் விலை மன்னிக்க முடியாதது. ஒரு புதிய இயல்பு நிலை உறுதியாக வேரூன்றியிருக்கும் ஒரு தருணத்தில் நீங்கள் விமானப் படையில் இணைகிறீர்கள்.

இது உயர்மட்ட செயல்பாட்டுத் தயார் நிலையால் வரையறுக்கப்பட்ட ஒரு சகாப்தம். நடவடிக்கைகளின் தீவிரம் குறைந்திருக்கலாம்; ஆனாலும் ஆபரேஷன் சிந்தூர் தொடர்கிறது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் விழிப்புடனும் சுறுசுறுப்புடனும் தயாராகவும் இருக்கும் திறனில்தான் நமது பலம் அடங்கியுள்ளது.

வெற்றியை ஒரு பழக்கமாக்கிக் கொள்வது இந்த புதிய இயல்பு நிலையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

போர்கள் வெறும் சொல் ஆற்றலால் வெல்லப்படுவதில்லை. மாறாக, நோக்கமுள்ள செயல்களால் வெல்லப்படுகின்றன'' என தெரிவித்தார்.

முன்னதாக, விமானப்படையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த விமானப் பயிற்சி அதிகாரிகளின் பயிற்சி வெற்றிகரமாக நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் ஒருங்கிணைந்த பட்டமளிப்பு அணிவகுப்பு நடத்தப்பட்டது.

---

### கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக

# த.வெ.க. தலைவர் விஜய்யிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டம்



**கரூர், டிச. 14-**

கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான சம்பவம் தொடர்பாக, விஜய்யிடம் விரைவில் விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளது.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 27-ம் தேதி நடைபெற்ற த.வெ.க. தலைவர் விஜய்யின் பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் இறந்தனர். மேலும் 110 பேர் காயமடைந்தனர். இதுதொடர்பான வழக்கை விசாரித்த சுப்ரீம்கோர்ட் நீதிபதிகள் ஜே.கே.மகேஸ்வரி, என்.வி.அஞ்சரியா அடங்கிய அமர்வு, கடந்த அக்.13ம் தேதி இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. அதன்படி, இவ்வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டதுடன், விசாரணையை சுப்ரீம் கோர்ட் ஓய்வுபெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையிலான குழு கண்காணிக்கும் என்றும் தெரிவித்தது. இதனையடுத்து இந்த வழக்கினை சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். த.வெ.க. மாநில பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், இணை செயலாளர் நிர்மல் குமார், ஆதவ் அர்ஜூனா, கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் உள்ளிட்டோர் சி.பி.ஐ. விசாரணைக்கு ஆஜராகி தங்களது தரப்பு விளக்கங்களை அளித்திருந்தனர். இந்தநிலையில் இந்த வழக்கில் விரைவில் த.வெ.க. தலைவர் விஜய்யிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. சார்பில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து விஜய்யிடம் விசாரணை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை சி.பி.ஐ. அதிகாரிகள் தற்போது தொடங்கியிருப்பதாக கூறப்படுகிறது. இதில் த.வெ.க. தலைவர் விஜய்யை கரூருக்கு அழைத்து விசாரணை நடத்துவதில் பாதுகாப்பு சிக்கல்கள் இருப்பதால் அவரிடம் சென்னையிலேயே விசாரணை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



100 நாள் வேலை திட்டத்திலிருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்குவதை வன்மையாக கண்டிக்கிறேன். பா.ஜ.க.வுக்கு இறுதி அத்தியாயம் தொடங்கி விட்டதால் இத்தகைய இழிவான செயல்களில் ஈடுபடுகிறார்கள். இதுபோன்ற செயல்களினால்தான் பா.ஜ.க.வின் தரம் தாழ்ந்த அரசியல் வெளிப்படுகிறது.

**- செல்வப்பெருந்தகை**



பா.ஜ.க.வின் வளர்ச்சிக்கு தி.மு.க.வே காரணம். நாட்டின் வளர்ச்சியை பற்றி சிந்திப்பவர்கள் ஜாதி, மதம், கடவுளை பற்றி சிந்திக்க மாட்டார்கள். அயோத்தி பிரச்சனையை வைத்து அரசியல் செய்தார்கள். இப்போது அங்கு ராமர் கோவில் கட்டி விட்டதால் சர்ச்சை நீங்கி அந்த பிரச்சனை முடிவுக்கு வந்ததால் முருகனை கையில் எடுத்திருக்கிறார்கள்.

**- சீமான்**



இன்று சிலர் கட்சி தொடங்கிய உடனே நான்தான் முதல்வர் என்று கூறி வருகின்றனர். அத்தகையவர்களுக்கு எந்த அரசியல் பணியோ, அடிப்படை பணியோ தெரியவில்லை. ஆளும் தி.மு.க. அரசு மீதும், அக்கட்சி மீதும் எங்களுக்கும் விமர்சனங்கள் உண்டு. எனினும் கூட்டணியை, உறவை, நட்பை நாங்கள் போற்றுகிறோம்.

**- திருமாவளவன்**



காப்பீட்டுத் துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் முடிவை வரவேற்கிறேன். ஐ.கே. குஜ்ரால் ஆட்சியின்போது, காப்பீட்டுத் துறையில் 20 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட போது அதனை பா.ஜ.க. எதிர்த்தது. ஆனால் தற்போது அனுமதித்துள்ளது.

**- ப.சிதம்பரம்**



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி மதுரவாயல் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் சதிகளை வென்ற சமரன் மாபெரும் வாழ்த்தரங்கம் நொளம்பூரில் பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்சி தலைமையில் நடைபெற்றது இதில் காரம்பாக்கம்.க.கணபதி எம்.எல்.ஏ, திக துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சே.மெ. மதிவதனி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் துரைவீரமணி, மாமன்ற உறுப்பினர்கள் ராமாபுரம் வ.செல்வகுமார், கே.ராஜூ, ச.சங்கர்கணேஷ், பாரதி, ரமணிமாதவன் கலந்து கொண்டனர்.

# புழல் சிறைச்சாலையில் காவலரை தாக்கிய கைதி

**சென்னை டிச14-**

புழல் தண்டனை சிறையில் சுமார் 1300க்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர். இங்கு, போதைப்பொருட்கள் மற்றும் செல்போன்கள் பயன்படுத்தப்படுவதாக சிறை துறையினருக்கு புகார்கள் வந்ததன. அதன் அடிப்படையில், நேற்று சிறை காவலர்கள் கைதிகள் அறைகளில் சோதனை செய்தனர். இந்நிலையில், அம்பத்தூர் – புதூர் பிரதான சாலை சார்ந்த சஞ்சய் (24) என்பவர், ஆள் கடத்தல் வழக்கில் தண்டனை இந்த சிறையில் உள்ளார். இவரிடம், போலீசார் சோதனை செய்தபோது, இவர் வைத்திருந்த செல்போனை பறிமுதல் செய்து விசாரணை செய்தனர். அதில், இதே அறையில் உள்ள சென்னை கொத்தவால் சாவடியை சேர்ந்த அஜித் (31) என்பவர், போதைப்பொருள் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர்தான் செல்போனை வழங்கினார் என கூறினார். அதன்பேரில் விசாரித்ததில், தூத்துக்குடியை சேர்ந்த பிரபல ரவுடி ராஜேஸ்வரன் (எ) கோரை பள்ளம் ராஜேஷ் (31) என்பவரிடம் சென்று விசாரித்தபோது, ஒருவர் ஒருவரை மாற்றி சொன்னதின் பேரில் மூவரையும் நேரடியாக விசாரணை செய்தனர். அப்போது, அஜித் என்ற கைதி, ஆவேசமாக பேசி உன்னை என்ன பண்ணுகிறேன் என்று பாருங்கள் என ஒருமையில் பேசி, அருகில் இருந்த சிறை காவலர் பாபு ராஜனை தாக்கி, கீழே தள்ளிவிட்டார். அதிர்ச்சியடைந்த மற்ற சிறை காவலர்கள், அவரை மீட்டு சிறை வளாகத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.இதுகுறித்து சிறை ஜெய்லர் முருகேசன், புழல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். புகாரின்பேரில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னையில் கனமழை காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ரூ.13.35 கோடி ஒதுக்கீடு

**சென்னை டிச 14-**

டிட்வா புயல், கனமழை காரணமாக சென்னையில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ஒவ்வொரு மண்டலத்துக்கும் தலா ரூ.89லட்சம் வீதம் மொத்தம் 15 மண்டலத்திற்கு ரூ.13.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பருவமழை காலம் வந்துவிட்டால் போதும், சென்னை மக்கள் தினமும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்குவது எழுதப்படாத விதியாக மாறிவிட்டது. சென்னையில் எங்கு பார்த்தாலும் பகல் நேரங்களில் வாகனங்கள் அணிவகுத்து செல்கின்றன. அதிலும், குறிப்பாக பீக் அவர்ஸ் நேரங்களில் சொல்லவே தேவையில்லை.இப்படி எந்த பக்கம் பார்த்தாலும் பிசியாக காணப்படும் சென்னை சாலைகள் சேதமடைந்துள்ளதால், வாகன ஓட்டிகள் தினமும் சிரமத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது. சமீபத்தில் சென்னை அருகே மையம் கொண்டிருந்த டிட்வா புயலால் ஒரு வாரமாக தொடர் மழை பெய்தது. இந்த தொடர் மழையால் பல்வேறு இடங்களில் சாலைகள் குண்டும் குழியுமாக மாறி சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

சுமார் 109 கிலோ மீட்டர் சாலைகளில் பள்ளங்கள் உருவாகியுள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. குண்டும் குழியுமான சாலைகளில் பலர் விழுந்து எழுந்து செல்லும் நிலை உள்ளது. பெருங்களத்தூர் அருகே சாலை மோசமாக பழுதடைந்திருந்ததால் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பலர் அவதியடைந்தனர்.

சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களால் உருவான குழிகளில் நிரம்பி நிற்கும் தண்ணீரில் வாகனங்கள் செல்லும் போது பொதுமக்கள் தடுமாறி கீழே விழுகின்ற நிலை உள்ளது. இது மட்டுமல்ல, சாலையை துண்டித்து செல்லும் மற்றும் சாக்கடை கால்வாய் அடைப்பு போன்றவற்றை சரி செய்வதற்காக தோண்டப்பட்ட குழிகளால் மிகவும் மோசமாக காணப்படுகின்றன. குறிப்பாக பைக்குகளில் செல்லக்கூடியவர்கள் பள்ளங்களில் சிக்கி வாகனத்தோடு விழுகிறார்கள். சென்னையை பொறுத்தவரை 387 கிலோ மீட்டர் தூரத்திற்கு 471 போக்குவரத்து சாலைகளும் 5500 கிலோ மீட்டர் தூரத்திற்கு 3174 உட்புற சாலைகளும் உள்ளன. இந்த சாலைகளில் முக்கிய ரோடுகளில் பள்ளங்கள் அதிகளவு இருக்கின்றன. அதனை மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்து உடனுக்குடன் சாலைகளை சரி செய்ய வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். குறிப்பாக டிட்வா புயல் மழைக்கு பிறகு சாலை மிக மோசமானதாக காணப்படுகிறது.

அவற்றை போர்க்கால அடிப்படையில் உடனே செப்பனிட வேண்டும் என வாகன ஓட்டிகள் எதிர்பார்க்கிறார்கள். இந்த சூழ்நிலையில், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களுக்கும் சாலைகளில் உள்ள பள்ளங்களை சரிசெய்ய ஒரு மண்டலத்துக்கு தலா ரூ.89 லட்சம் வீதம் மொத்தம் 15 மண்டலங்களுக்கு ரூ.13.35 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: சென்னையில் 2ம் கட்ட மெட்ரோ பணிகள் நடைபெறுவதன் காரணமாக சாலை பணிகள் மறுசீரமைக்க முடியாத சூழல் நிலவுகிறது. இருப்பினும், பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் சேதமடைந்த சாலைகளை உடனுக்குடன் கண்டறிந்து சீரமைக்கப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே சென்னையில் முக்கிய சாலைகள் எல்லாம் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சீரமைக்கப்பட்டது. தற்போது மழை தொடங்கி விட்டதால் புதிதாக போடப்படும் சாலை அமைக்கும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது.

இப்பணிகள் எல்லாம் மழை காலம் முடிந்த உடன் தொடங்கப்படும். இதற்கிடையே டிட்வா புயல் காரணமாக தொடர்ந்து பெய்த மழையால் சென்னையில் சாலைகளில் பள்ளங்கள் உருவாகியுள்ளது.

மழைக்காலங்களில் சாலைகள் சேதமடைவது இயல்பு தான். ஆனால், அந்த சேதங்களை உடனடியாக சரிசெய்வது மாநகராட்சியின் கடமையாகும். அதன் அடிப்படையில் சேதமடைந்த சாலைகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அந்த சாலைகளை சீரமைக்கும் பணிகள் தொடங்கப்பட உள்ளது. இதற்காக ஒவ்வொரு மண்டலத்துக்கு ரூ.89 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நவீன இயந்திரங்களை பயன்படுத்த சாலை சீரமைப்பு பணிகள் விரைவாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பாண்டிபஜார் பகுதியில் ரூ.40 லட்சம் பணம் மோசடி: 3 பேர் கைது

**சென்னை டிச 14-**

சென்னை, நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த ஆனந்தராஜ் என்பவர் பைனான்ஸ் தொழில் செய்து வருவதாகவும், கடந்த 9 ந் தேதி அன்று காலை, தி.நகர், ராஜாபாதர் தெருவிலுள்ள ஒரு டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தபோது, அங்கிருந்த 3 பேர் , நாங்கள் தஞ்சாவூரைச் சேர்ந்தவர்கள் என்றும், நாங்கள் வர்த்தக வணிகம் செய்வதாகவும், எங்களது தொழிலுக்கு ரூ.40 இலட்சம் கொடுத்தால் 5 மணி நேரத்தில் ரூ.50 இலட்சமாக தருவதாக கூறி, அருகில் அவர்கள் தங்கியிருந்த ஒரு ஓட்டலின் அறைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள ஒரு பெட்டியில் ரூ.50 இலட்சம் பணத்தை காண்பித்ததாகவும், அவர்களது ஆசை வார்த்தைகளை நம்பி ஆனந்தராஜ் தங்க நகைகளை அடகு வைத்து, ரூ.40 இலட்சம் பணத்தை மேற்படி 3 நபர்கள் கூறிய வங்கி கணக்கிற்கு மூலம் அனுப்பியதாகவும், ஆனால் அவர்கள் சொன்னபடி ரூ.50 இலட்சம் பணத்தை தராமல் 3 நாட்கள் மேற்படி அறையில் தங்க வைத்து ஏமாற்றியதாகவும், எனவே தான் கொடுத்த ரூ.40 இலட்சம் பணத்தை தருமாறு கேட்டபோது, அவர்கள் இரும்பு கம்பியால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தாகவும், பாதிக்கப்பட்ட ஆனந்தராஜ் என்பவர் சௌந்தர பாண்டியனார் அங்காடி காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில் போலீசார் மோசடி பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

சௌந்தர பாண்டியனார் அங்காடி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி ஓட்டலின் அறையில் தங்கியிருந்த எதிரிகளான தஞ்சாவூர், கிழக்கு காவேரி நகரைச் சேர்ந்த 1.லூர்து என்சன்ராஜ், 2.மரிய செர்வின் ஜெப்ரி, 3.ஷெல்டன் பெர்மினிஸ், ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 5 செல்போன்கள், 1 இரும்பு கம்பி மற்றும் வங்கி ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

புகார்தாரர் அனுப்பிய பணம் ரூ.40 இலட்சத்தை எதிரிகள் ஆன்லைன் மூலம் மற்றொரு நபருக்கு அனுப்பியுள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 3 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.மேலும், இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள எதிரிகளை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# சென்னை மண்டல திருக்கோயில்கள் சார்பில் 4-ஆம் ஆண்டாக ஐயப்பன் மலர் வழிபாடு: அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று 108 குருசாமிகளுக்கு சிறப்பு செய்தார்

**சென்னை,டிச.14**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்கள் இன்று (12.12.2025) மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் சென்னை மண்டல திருக்கோயில்கள் சார்பில் 4-ஆம் ஆண்டாக நடைபெற்ற ஐயப்பன் மலர் வழிபாடு நிகழ்ச்சியில் பங்கேற்று, 40 ஆண்டுகளுக்கு மேலாக சபரிமலைக்கு சென்று வந்த 108 குருசாமிகளை பாராட்டும் வகையில் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, ஐயப்பன் திருவுருவம் பொறித்த வெள்ளி டாலருடன் கூடிய துளசி மாலைகளை வழங்கி சிறப்பு செய்தார். இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பில் சித்தர்கள் மற்றும் அருளாளர்களுக்கு விழாக்கள் நடத்தி சிறப்பு செய்வதோடு, இறையன்பர்கள் பங்கேற்புடன் மகாசிவராத்திரி பெருவிழா, நவராத்திரி விழா, ஐயப்பன் மலர் வழிபாடு போன்ற சிறப்பு வழிபாடுகளும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், சென்னை மண்டல திருக்கோயில்கள் சார்பில் 4-ஆம் ஆண்டாக இன்று (12.12.2025) மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் ஐயப்பன் மலர் வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்கள் கலந்து கொண்டு, 40 ஆண்டுகளுக்கு மேலாக சபரிமலைக்கு சென்று வந்த 108 குருசாமிகளை பாராட்டும் வகையில் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, ஐயப்பன் திருவுருவம் பொறித்த வெள்ளி டாலருடன் கூடிய துளசி மாலைகளை வழங்கி சிறப்பு செய்தார். அதனைத் தொடர்ந்து ஆன்மிக இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் கோ.செ.மங்கையர்க்கரசி, சிறப்பு பணி அலுவலர் ச.லட்சுமணன், சென்னை மண்டல இணை ஆணையர்கள் சு. மோகனசுந்தரம், கி. ரேணுகாதேவி, ஜ.முல்லை, துணை ஆணையர்கள் திரு. இரா.ஹரிஹரன், சி. நித்யா, உதவி ஆணையர்கள் கி.பாரதிராஜா, க.சிவக்குமார், செல்வி கே.எஸ்.நற்சோணை, அலுவலர்கள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# தங்க நகையை திருடிய வேலைக்கார பெண்மணி கைது

**சென்னை டிச் 14-**

சென்னை, ஆழ்வார்பேட்டை, டி.டி.கே. சாலையில் குடும்பத்துடன் வசித்து வரும் அஜய் அய்யப்பன், வ/40 என்பவர் சொந்தமாக தொழில் செய்து வருவதாகவும், இவரது 2 குழந்தைகளை பார்த்துக்கொள்ள தனியார் ஏஜென்சி நிறுவனம் மூலம் செண்பகம், வ/43 என்பவர் சுமார் 1 வருடமாக வீட்டில் வேலை செய்து வருவதாகவும், கடந்த 26.11.2025 அன்று அஜய் அய்யப்பன் வீட்டின் பீரோவில் வைத்திருந்த தங்க நகைகளை சரிபார்த்தபோது, குழந்தையின் தங்கச்சங்கிலி மற்றும் மனைவியின் தங்கச்சங்கிலிகள் என சுமார் 41.5 கிராம் எடை கொண்ட 3 தங்கச்சங்கிலிகள் காணவில்லை எனவும், மேற்படி வேலைக்கார பெண் செண்பகம் மீது சந்தேகம் உள்ளதாகவும், அஜய் அய்யப்பன் தேனாம்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். தேனாம்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்ததில், மேற்படி வேலைக்கார பெண்மணி செண்பகம் புகார்தாரர் வீட்டில் சிறிது சிறிதாக தங்க நகைகளை திருடிச் சென்று அடகு வைத்துள்ளதும் தெரியவந்தது. அதன்பேரில், காவல் குழுவினர் மேற்படி திருட்டில் ஈடுபட்ட செண்பகம், என்பவரை கடந்த 11.12.2025 அன்று கைது செய்தனர். அவரிடமிருந்து 41.5 கிராம் எடை கொண்ட 3 தங்கச்சங்கிலிகள் மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி செண்பகம் வி, சிறையில் அடைக்கப்பட்டார்..

# நெற்குன்றம் பகுதியில் ஆக்கிரமிப்பு கட்டிடம் அகற்றம்

**சென்னை டிச 14-**

நெற்குன்றம், பெருமாள் கோயில் தெருவில் சுமார் 10 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டிருந்த ஆக்கிரமிப்பு கட்டிடத்தை, உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில், மாநகராட்சி அதிகாரிகள் அகற்றினர்.

வளசரவாக்கம் மண்டலம், 145வது வார்டு, நெற்குன்றம் பெருமாள் கோயில் தெருவில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் இடத்தில், சுமார் 10 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 2 தளங்களுடன் கட்டிடம் ஆக்கிரமித்து கட்டப்பட்டு இருந்தது. இதுதொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம், ஆக்கிரமிப்பு கட்டிடத்தை அகற்ற உத்தரவிட்டது. அதன்பேரில், மாநகராட்சி அலுவலர்களால், காவல் துறை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியத்தை சார்ந்த அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து நேற்று பொக்லைன் இயந்திரம் மூலம் இடித்து அகற்றப்பட்டது.

# வேலம்மாள் நெக்ஸஸ் மாணவர்களின் கைப்புத்தக வெளியீடு




**சென்னை டிச 14-**

142 வேலம்மாள் நெக்ஸஸ் மாணவர்களின் கைப்புத்தக வெளியீடு – எழுத்தாளர் சேதன் பகதின் சிறப்பு வருகைபுரிந்தார்.வேலம்மாள் வித்யாலயா ஆவடி மற்றும் பருத்திபட்டு பள்ளி - இன்று 142 மாணவர்கள் தங்களால் எழுதப்பட்ட கைப்புத்தகங்களை வெளியிடும் அற்புதமான விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு புகழ்பெற்ற எழுத்தாளர் சேதன் பகத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவர்களின் புத்தகங்களை வெளியிட்டு வாழ்த்தினார்.பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மாலை அணிவித்து ஆசீர்வதித்த உணர்ச்சி பூர்வமான தருணம் நிகழ்வின் சிறப்பை மேலும் உயர்த்தியது.இந்த விழா, வேலம்மாள் நெக்ஸஸ் மாணவர்கள் அளித்த மிகுந்த வரவேற்புடன் தொடங்கியது. அவர்களின் ஒழுங்கு, ஒற்றுமை மற்றும் கலாசார நிகழ்வுகள் அனைவரையும் கவர்ந்தன.உரையாடல் அமர்வில், மாணவர்கள் பல ஆர்வமுள்ள கேள்விகளை முன்வைத்தனர். அவற்றிற்கு சேதன் பகத் அவர்கள் மகிழ்ச்சியுடன் பதிலளித்து, சிறிது தமிழிலும் உரையாடி அனைவரையும் ஈர்த்தார்.அவர் வழங்கிய முன்னேற்றப் பேச்சில், ஒவ்வொரு மாணவரிலும் தனித்துவமான படைப்பாற்றல் உள்ளது என்பதை வலியுறுத்தி, தொடர்ந்து எழுதவும் கனவு காணவும் ஊக்கமளித்தார்.

வேலம்மாள் நெக்ஸஸ் தாளாளர் எம்.வி.எம். வேல்மோகன் பேசியபோது:-வேலம்மாள் நெக்ஸஸ் தாளாளர் எம்.வி.எம். வேல்மோகன் ம் 142 மாணவர்களின் புத்தகங்களில் வெளிப்பட்ட படைப்பாற்றல், தன்னம்பிக்கை மற்றும் தனித்துவமான சிந்தனைகளை பாராட்டினார்.குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோரின் ஊக்கம் மற்றும் ஆதரவு மிக முக்கியமான பங்காற்றுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கொருக்குப்பேட்டை பகுதியில் பெண்ணை கிண்டல் செய்ததை தட்டி கேட்டவர் கைது

**சென்னை டிச 14-**

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, பார்த்தசாரதி 7வது தெருவில் வசித்து வரும் என்பவர் மண்ணடியில் கூலி வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 10.ந் தேதி அன்று இரவு, கொருக்குப்பேட்டை, சின்ன மார்க்கெட் அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு ஜாபர்அலிக்கு அறிமுகமான பெண்ணை, கர்ணா என்பவர் கிண்டல் செய்துள்ளார். இது தொடர்பாக ஜாபர்அலி, கர்ணாவிடம் கேட்டபோது, இருவருக்கும் இடையே வாய்தகராறு ஏற்பட்டு, இருவரும் அங்கிருந்து சென்ற பின்னர், சிறிதுநேரம் கழித்து ஜாபர்அலி, பார்த்தசாரதி 7வது தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த கர்ணா, மேற்படி ஜாபர்அலியை தகாத வார்த்தைகள் பேசி, கத்தியால் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இத்தாக்குதலில் காயமடைந்த ஜாபர்அலி, ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, கொருக்குப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். கொருக்குப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி கருணாகரன் (எ) கர்ணா, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி கருணாகரன் (எ) கர்ணா மீது ஏற்கனவே 1 குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி கருணாகரன் (எ) கர்ணா விசாரணைக்குப்பின்னர், சிறையில் அடைக்கப்பட்டார்

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் பாசனக் கிணறுகள் நிரம்பியது: நவரைப் பட்டத்தில் குண்டு நாத்து நடவு செய்ய விவசாயிகள் தயார்

**காஞ்சிபுரம், டிச. 14 -**

வடகிழக்கு பருவ மழைக்கு காஞ்சிபுரத்தில் உள்ள விவசாயக் கணறுகள் நிரம்பியது. 'நபரைப் பட்டத்தில்' குண்டு நெல் நாத்துக்களை நடவு செய்ய விவசாயிகள் தயாராகிவிட்டனர்.

**விவசாயிகள்**

ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழை தான், தமிழகத்துக்கு தேவையான மழையை கொடுத்து வருகிறது. இந்தப் பருவ மழை செப்டம்பர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை மூன்று மாத காலத்திற்குள் தேவையான மழையை கொட்டி தீர்த்து விடும்.

நடப்பாண்டு வடகிழக்கு பருவ மழைக்கு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பாசன ஏரிகள், கிணறுகள், குளம், குட்டைகள் அனைத்து நீர் நிலைகளும் நிரம்பியது. பாலாறு, வேகவதி , செய்யாறு ஆகிய மூன்று ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

காஞ்சிபுரம் சுற்றியுள்ள 470 பாசன ஏரிகள் முழு கொள்ளலவை எட்டி உபரி நீர் வெளியேறியது. இதே போல் பாசன கிணறுகளும் நிரம்பி வழிந்தது. இந்த தண்ணீரைக் கொண்டு விவசாயிகள் 'நவரைப் பட்டத்தில்' குண்டு நெல் நாத்தை விட்டு மார்கழி முதல் வாரத்தில் நடவு செய்ய தயாராகி விட்டனர்.

இது குறித்து காஞ்சிபுரத்தில் உள்ள மூத்த விவசாயிகள் சிலர் கூறும்போது; 'தமிழகத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவ மழை - தென்மேற்கு பருவ மழை குறித்த காலத்தில் பெய்து விட்டால், இங்குள்ள அனைத்து நீர் நிலைகளும் நிரம்பி விடும். ஆனால், பருவ மழை காலம் தவறி பொழிகிறது.

கடந்த 30 ஆண்டுகளாக இந்த இரண்டு பருவ மழையும், தமிழகத்தை ஏமாற்றி வருகிறது. அதற்கு பதிலாக 'புயல் உருவாகி' அதன் மூலம் தான் நாம் மழையே பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டு கூட இரண்டு 'புயல் உருவானதால்' தமிழகத்திற்கு தேவையான மழை பெய்தது.

இந்த மழை நீரை நம்பி, காஞ்சிபுரத்தில் உள்ள விவசாயிகளாகிய நாங்கள் குண்டு நெல் நாத்து விற்று மார்கழி மாதம் முதல் வாரத்தில் நடவு செய்ய தயாராகி விட்டோம் .இந்த குண்டு நெல் சாகுபடி எங்களுக்கு தேவையான மகசூலை கொடுக்கும் என, நம்புகிறோம். மார்ச் - ஏப்ரல் மாதங்களில் வெயிலை பொறுத்து தான் இரண்டாம் போகம் சாகுபடி செய்வது குறித்து முடிவு எடுப்போம்,' இவ்வாறு காஞ்சிபுரம் விவசாயிகள் தெரிவித்துள்ளன.

# குட்கா புகையிலை பாக்கெட்டுகள் வைத்திருந்த மூவர் கைது

**சென்னை டிச 14-**

.சென்னை பேசின்பாலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், நேற்று 12.ந் தேதி அன்று புளியந்தோப்பு நெடுஞ்சாலை, காந்தி நகர் பொதுக் கழிப்பிடம் அருகே கண்காணித்து, அங்கு நின்று கொண்டிருந்த 3 பேரிடம் விசாரணை செய்து அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது, அதில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலைப் பாக்கெட்டுகளையும், ஒருவர் கத்தியை மறைத்து வைத்திருந்ததும் தெரியவந்தது. அதன்பேரில் பேசின்பாலம் காவல் நிலையத்தில் குட்கா மற்றும் ஆயுத சட்டம் உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து சட்டவிரோதமாக குட்கா வைத்திருந்த புளியந்தோப்பு, காந்தி நகர் 3வது தெருவைச் சேர்ந்த 1.பிரபு, 2.மணிகண்டன், 3.மதன்குமார், ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 480 கிராம் எடை கொண்ட 37 கூலிப் குட்கா பாக்கெட்டுகள் மற்றும் 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி பிரபு பேசின் பாலம் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது 1 கொலை மற்றும் 4 கொலைமுயற்சி உட்பட 7 குற்ற வழக்குகளும், மணிகண்டன் மீது 2 குற்ற வழக்குகளும், மதன்குமார் மீது 3 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

**மழைநீர் உயிர்நீர்**

# தேனாம்பேட்டை காவல் நிலைய வழக்கில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி கைது

**சென்னை டிச 14-**

சென்னை தேனாம்பேட்டை காவல் நிலைய எல்லையில் கடந்த 2024ம் ஆண்டு ஒரு பெண்ணை தாக்கி கொலை மிரட்டல் விடுத்த வழக்கில் எதிரி ஸ்ரீராமகிருஷ்ணன் என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்ற எதிரி ஸ்ரீராமகிருஷ்ணன் சைதாப்பேட்டை 18வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு முறையாக ஆஜராகாமல் தலைமறைவானதால், எதிரி ஸ்ரீராமகிருஷ்ணன் மீது 09.10.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

தேனாம்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மேற்கொண்டு பல்வேறு இடங்களில் தேடி நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி ஸ்ரீராமகிருஷ்ணன், என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

# சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாம்

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு



**சேலம்,டிச.14-**

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் *(13.12.2025)* நடைபெற்று வரும் "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வுக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் இருந்து காணொலி காட்சியின் வாயிலாக "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை *02.08.2025* அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து அன்றையதினம் சேலம் மாநகராட்சி, மணக்காடு, காமராஜர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமானது தொடங்கி வைக்கப்பட்டது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இதுவரை நடத்தப்பட்ட *21* மருத்துவ முகாம்களில் *13,199* ஆண்களும், *17,928* பெண்களும் என மொத்தம் *31,127* பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்று உள்ளனர். இதில் *24,650* நபர்களுக்கு இரத்தப் பரிசோதனையும், *21,247* நபர்களுக்கு இசிஜி பரிசோதனையும், *3,081* நபர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனை, *3,399* நபர்களுக்கு எக்கோ பரிசோதனையும் மற்றும் *2,458* நபர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் *13.12.2025* இச்சிறப்பு மருத்துவ முகாமானது சேலம் வட்டாரம், கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்படுகிறது. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்படுகிறது.

மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம் உட்பட *17* வகையான சிறப்பு மருத்துவ துறைகள் சார்ந்த சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பொதுப் பணித்துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) சார்பில் பள்ளிக் கல்வித்துறைக்கு ரூ.*1.03* கோடி மதிப்பீட்டில் கன்னங்குறிச்சி அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு *5* வகுப்பறைகள் மற்றும் *1* ஆய்வகம் கட்டடம் கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டி வைத்தார்கள். இதில் தரைதளத்தில் *2* வகுப்பறைகளும், முதல் தளத்தில் *2* வகுப்பறைகளும், இரண்டாம் தளத்தில் *1* வகுப்பறை மற்றும் *1* ஆய்வகமும் அமைக்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஜெ. தேவி மீனாள், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.நந்தினி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தியாகராஜன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் முதற்கட்டத்தில் 2,49,540 மகளிரும், 2-ம் கட்ட விரிவாக்கத்தில் 37,308 மகளிரும் என 2,86,848பேர் பயன்அடைந்துள்ளனர்

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தகவல்



**நாமக்கல்,டிச.14-**

தமிழ்நாடு முதலமைச்சர் *12.12.2025* அன்று, சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தமிழ்நாட்டின் சாதனை பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2ஆவது கட்ட விரிவாக்கத்தினை தொடங்கி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற காணொளி நிகழ்ச்சியில், கலெக்டர் துர்காமூர்த்தி, தலைமையில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். மூர்த்தி , மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கீழ் திட்டத்தின் *37,308* மகளிருக்கு பற்று அட்டைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழும் வகையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மகளிர் வாழ்வில் ஏற்றம் காண கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், விடியல் பயண திட்டம், பெண்கல்வியை உயர்த்திடும் வகையில் புதுமைப் பெண் திட்டம், பணிபுரியும் மகளிருக்கு தோழி விடுதிகள், உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு *50* சதவீத இட ஒதுக்கீடு உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.


தமிழ்நாடு முதலமைச்சர் வரலாற்றுச் சிறப்புமிக்க "கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தினை" முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான *2023*-ஆம் ஆண்டு, பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான *15.09.2023* அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதற்கட்டமாக தொடங்கி வைத்தார்கள். அந்த வகையில் நாமக்கல் மாவட்டத்தில் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.*1,000/-* வழங்கும் "கலைஞர் மகளிர் உரிமை திட்டம்" மூலம் *2,49,540* மகளிர் பயன் பெற்று வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் விடுபட்ட மகளிருக்கும் உரிமைத் தொகை வழங்கிடும் விதமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2ஆவது கட்ட விரிவாக்கத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள். அதன்படி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நாமக்கல் மாவட்டத்தில் *37,308* மகளிருக்கு பற்று அட்டைகளை வழங்கினார்.

நாமக்கல் வட்டத்தில் *5085* மகளிரும், இராசிபுரம் வட்டத்தில் *7896* மகளிரும், சேந்தமங்கலம் வட்டத்தில் *4195* மகளிரும், மோகனூர் வட்டத்தில் *1934* மகளிரும், கொல்லிமலை வட்டத்தில் *1165* மகளிரும், திருச்செங்கோடு வட்டத்தில் *7739* மகளிரும், பரமத்திவேலூர் வட்டத்தில் *3828* மகளிரும், குமாரபாளையம் வட்டத்தில் *5466* மகளிரும் என மொத்தம் *37308* மகளிர் பயன்பெறுகின்றனர். எனவே கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் முதற்கட்டத்தில் *2,49,540* மகளிரும், 2-ம் கட்ட விரிவாகத்தின் மூலம் *37308* மகளிரும் என மொத்தம் *2,86,848* மகளிர் பயன்பெறவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், திருச்செங்கோடு நகர்மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, மாவட்ட வருவாய் அலுவலர் மா.க.சரவணன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, வருவாய் வட்டாட்சியர்கள் வே.சாந்தி (நாமக்கல்), பி.எஸ்.லெனின் (திருச்செங்கோடு), தனித்துணை கலெக்டர் (ச.பா.தி) சு.சுந்தரராஜன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மு.கிருஷ்ணவேணி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் முருகன், உட்பட துறைச் சார்ந்த அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# ராசிபுரம் அருகே உள்ள பட்டணம் பொன்மலையில் ஸ்ரீ கால பைரவ ஜென்மாஷ்டமி விழா



**ராசிபுரம்,டிச.14-**

ராசிபுரம் அருகே உள்ள பட்டணம் பொன்மலையில் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனமர் அருள்மிகு பொன்னேஸ்வரர் திருக்கோயிலில் ஜென்மாஷ்டமி தினமான ஸ்ரீ கால பைரவருக்கு தேய்பிறை ஜென்மாஷ்டமி கடந்த 7ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. அதனைத் தொடர்ந்து காலையில் மங்கல இசையுடன் விக்னேஸ்வர பூஜை, சங்கல்பம், புண்யாகம், பஞ்சகவ்யம், கணபதி ஹோமம், பூர்ணாஹீதி தீபாராதனையுடன் நடைபெற்றது. மேலும் அஸ்வ பூஜை, கோ பூஜை, ரிஷப பூஜை செய்து ஸ்ரீ நவ கால பைரவருக்கு ஏகாதச ருத்ர பாராயணம் வில்வ அர்ச்சனை நடைபெற்றது. மாலையில் *64* பைரவர் சமேத *64* யோகினி கலச ஆவாஹனம் செய்து சிறப்பு யாகங்கள் செய்து வாசனை திரவியங்கள் மற்றும் *108* விசேஷ திரவிய கலச அபிஷேகம் நடைபெற்றது.

நாமக்கல் கிரீன் பார்க் கல்வி நிறுவனங்களின் இயக்குநர் ஆன்மீக பைங்கொழந்து முனைவர் சு.குருவாயூரப்பன் ஸ்ரீ கால பைரவர் ஜென்மாஷ்டமி பற்றிய சிறப்பு ஆன்மீக சொற்பொழிவு ஆற்றினார். இதனைத் தொடர்ந்து இரவு சோடச மகா தீபாராதனை உபசாரம் நடைபெற்றது. இரவு *11* மணி அளவில் திருக்கயிலாய சிவ வாத்தியங்கள் முழங்க மஹா குருதி பூஜை நடைபெற்றது. சனிக்கிழமை நிகழ்வாக ஸ்ரீ அஸ்த்ர தேவருக்கு தீர்த்தவாரி வைபவம் நடைபெற்று பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதில் பட்டணம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியை பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இவ்விழாவினை ஸ்ரீ வராஹி உபாசகர், சேலம் சிவ ஸ்ரீ சத்யோஜாத வெங்கடேஷ் சிவம், பொன்மலை திருத்தல அர்ச்சகர் சிவஸ்ரீ லோகநாத சிவம் மற்றும் பட்டணம் பொன்மலை அறக்கட்டளை மற்றும் ஊர் பொதுமக்கள் கட்டளைதாரர்களாக ஸ்ரீ நவ கால பைரவர் நண்பர்கள் குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# மோகனூரில் ஜனவரி 10ம் தேதி தமிழக விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

## தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் அறிக்கை



**நாமக்கல்,டிச.14-**

உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் ஆர். வேலுசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, தமிழகத்தில் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் நலன் கருதி கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.*4000*-ம் வழங்கப்படும் என தமிழக அறிவித்தது.

இதற்கான அறிவிப்பு வெளியிட்டும் தற்போது வரை அரசாணை வெளியிடவில்லை. இந்த ஆண்டு கரும்பு அரவை பருவம் தொடங்கியுள்ள நிலையில், கரும்பை வெட்டி சர்க்கரை ஆலைக்கு அனுப்பிய விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் மூலம் பழைய கிரைய தொகையான கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.*3290.50* மட்டுமே சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.*4000* வழங்கப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டு எட்டு மாதங்களுக்கு மேலாகியும், இதுவரை கரும்பு டன் ஒன்றுக்கு நான்காயிரம் வழங்கவில்லை.

இதனை கண்டித்து வருகின்ற *10.1.2026* அன்று காலை *11* மணிக்கு நாமக்கல் மாவட்டம், மோகனூர் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை முன்பு முதற்கட்டமாக உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்கம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு சப்பளை செய்த அனைத்து விவசாயிகளும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 1,023 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்

## எம்.எல்.ஏ. தே.மதியழகன் வழங்கினார்



**கிருஷ்ணகிரி,டிச.14-**

கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமை பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் *(13.12.2025)* துவக்கி வைத்து, *1,023* நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்தாவது: தமிழ்நாடு முதலமைச்சர் படித்த இளைஞர்;கள், வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதேப்போல் தமிழ்நாடு அரசு கல்வித் துறைக்கே அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் *6* முதல் *12* ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வி பயிலும், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் ரூ.*1000* மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் ரூ.*1000* மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. வெளி நாடுகளுக்கு சென்று படிக்க விரும்பும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறது.

நடைபெற்ற இம்முகாமில் முன்னணி நிறுவனங்களுடன் *116* - தனியார் நிறுவனங்கள் பங்கு பெற்றனர். இம்முகாமில் *2,853* நபர்கள் பதிவு செய்தனர். அவற்றில் *1,023* நபர்களுக்கு தனியார் நிறுவனங்கள் சார்பில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. எனவே பணிநியமண ஆணை பெற்றவர்கள் தங்கள் தொழில் திறனை மேம்படுத்தி சிறப்பாக பணியாற்ற வேண்டும் என பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் தெரிவித்தார்.

தொடர்ந்து பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் *60* நபர்களுக்கு பயிற்சி சான்றிதல் மற்றும் பணி நியமன ஆணைகளையும், இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம் சார்பாக கட்டுமான தொழிலாளர்கள், சணல் தயாரிப்பு பயிற்சி பெற்ற *50* நபர்களுக்கு சான்றிதல் மற்றும் தொழில் உபகரணங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு - சேலம்) பெ.கவிதா, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் கௌரி சங்கர், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் பிரசன்ன பாலமுருகன், வாழ்ந்து காட்டுவோம் திட்ட அலுவலர் கே.மனோகரன், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர். சௌ.கீதா, மாவட்ட திறன் பயிற்சி உதவி இயக்குநர் பன்னீர் செல்வம், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர் செந்தில் குமார், இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய அலுவலர் வெங்கடேசன், வட்டாட்சியர் ரமேஷ், மற்றும் கிருஷ்ணகிரி நகர் மன்ற உறுப்பினர்கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரநிதிகள், வேலைநாடுநர்கள் கலந்துக்கொண்டனர்.

# தருமபுரி மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்த்தல் பணிகள்

## கூடுதல் தலைமை தேர்தல் அலுவலர் பல்ராம் மீனா ஆய்வு

**தருமபுரி,டிச.14-**

தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகப் பகுதியில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறையில் எதிர்வரும் *2026* தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்காக பயன்படுத்த உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு *(EVMs and VVPATs)* முதல் நிலை சரிபார்த்தல் *(First Level Checking )* பணிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்று வருவதை இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள கூடுதல் தலைமை தேர்தல் அலுவலர் (டெல்லி) பல்ராம் மீனா , மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் ரெ.சதீஸ், ஆகியோர் *(13.12.2025)* ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதன்படி இந்திய தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு முதல் நிலை சரிபார்த்தல் பணிகள் நடைபெறுவதை உறுதிசெய்யும் வகையில் நியமிக்கப்பட்டுள்ள கூடுதல் தலைமை தேர்தல் அலுவலர் (டெல்லி) பல்ராம் மீனா இன்றையதினம் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேற்படி பணிகள் தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகப் பகுதியில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறையில் *11.12.2025* முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல் நிலை சரிபார்ப்பு பணிகள் நடைபெறுவதால் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு, வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல் நிலை சரிபார்ப்பு பணிகளை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரின் பிரதிநிதிகள் தினந்தோறும் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கவிதா, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பண்டரிநாதன், தேர்தல் வட்டாட்சியர் அன்பு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் அனைத்து தேசிய மற்றும் மாநில அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only




**வெண்ணந்தூர் பகுதியைச் சார்ந்த பூமிகா என்ற பொறியியல் மாணவிக்கு ரோட்டரி கிளப் ஆப் ராசிபுரம் ராயல் சார்பாக மடிக்கணினி இலவசமாக வழங்கப்பட்டுது. இந்நிகழ்ச்சியில் தலைவர் சக்திவேல், செயலாளர் கார்த்திக் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.**

# ஊத்தங்கரையில் அ.ம.மு.க, பொதுச்செயலாளர் பிறந்தநாள் விழா: கோயில் சிறப்பு பூஜை



**கிருஷ்ணகிரி,டிச.14-**

ஊத்தங்கரையில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் டி.டி.வி தினகரன் பிறந்தநாள் விழா மாவட்ட இணை செயலாளர் கண்மணி சிவகுமார் தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் சுரேஷ், சிவமணி ஆகியோர் முன்னிலையில் நடந்தது. அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டி.டி.வி தினகரன் பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்ட கழக செயலாளர் கணேஷ்குமார் ஆலோசனையில் மாவட்டத்தில் ஆங்காங்கே நலத்திட்டங்கள் அன்னதானத்துடன் இனிப்புகள் வழங்கியும் மாணவ மாணவர்களுக்கு நோட்டு பேனா பென்சில் வழங்கி கொண்டாடி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக ஊத்தங்கரை பனந்தோப்பு ஸ்ரீ சக்தி மாரியம்மன் திருக்கோவிலில் சிறப்பு பூஜை நடந்தது, அதைத்தொடர்ந்து நான்கு முனை சந்தித்தப்பில் இருசக்கர நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் பேருந்து பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். இவ்விழாவில் ஒன்றிய துணை செயலாளர் சிவலிங்கம், ஒன்றிய இணைச் செயலாளரும் கல்லாவி ஊராட்சி செயலாளருமான ரீகன், மாவட்ட மகளிர் அணி துணை செயலாளர் முனியம்மாள், நகரப் பொறுப்பாளர் முருகன், கல்லாவி பிரபு உள்ளிட்ட ஏராளமான அம்மா மக்கள் முன்னேற்ற கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

மாண்பமை உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் கோட்டாட்சியர் சமூகம், சங்ககிரி.
பி.இ.சி.ய. எண். 667 / 2025 ( D )
சண்முகம், S/O.லேட். பெருமாள்,
க.எண். 1 / 169, வண்ணாங்காடு,
பெரிய நாச்சியூர்,
குரும்பப்பட்டி கிராமம்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
........ மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர் அவர்கள்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்
..... எதிர்மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தந்தையின் தந்தை ( தாத்தா ) அரியண்ணகவுண்டர் த / பெ. அரியண்ணகவுண்டர் என்பவர் என்பவர் கடந்த 14 – 01 – 1964 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரின் அலுவலகத்தில் பதிவுசெய்ய உத்தரவு இடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த விளம்பரம் செய்த 15 தினங்களுக்குள்ளாக மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/ கோர்ட்டார் உத்தரவுப்படி /

S.K. VELUSAMY. M.A.,B.L.
COMMISSIONER OF OATHS,
ADVOCATE, IDAPPADI.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
பி.இ.சி.ப/ந.க. எண். 99 / 2024 / D
தங்கவேல், S/O. பழனிவேல்,
க.எண்.8–7/1, வெண்டனூர் காட்டுவளவு,
குரும்பப்பட்டி கிராமம் ,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
........... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர் அவர்கள்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
..... எதிர்மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாத்தா குள்ளகவுண்டர் என்பவர் கடந்த 10 –05 –1992 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /
P. VELMURUGAN., B.com.B.L.,
Advocate, Idappadi.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
பி.இ.சி.ப/ந.க. எண்.527 / 2025 / D
முருகேசன், S/O. சின்னுசாமி,
க.எண். 5/122, கரியானூர்,'
கோனேரிப்பட்டி அஞ்சல்,
கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராமம் ,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
........... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர் அவர்கள்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
..... எதிர்மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை சின்னுசாமி என்பவர் கடந்த 06–09 –2001 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /
P. VELMURUGAN., B.com.B.L.,
Advocate, Idappadi.

### 'சால்ட் லேக்' மைதானத்தில்
# சில நிமிடங்கள் இருந்த மெஸ்சி: கோபத்தில் ரசிகர்கள் கலவரம்

கொல்கத்தா, டிச. 14-

அர்ஜென்டினா அணியின் கேப்டனான பிரபல கால்பந்து வீரர் லயோனல் மெஸ்சி 14 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியாவுக்கு வந்துள்ளார். 3 நாள் சுற்றுப்பயணத்தின்படி, இந்தியாவின் கொல்கத்தா நகருக்கு இன்று அதிகாலை வருகை தந்த அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை காண்பதற்காக ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த கால்பந்து ரசிகர்கள் மிகுந்த உற்சாகத்துடன் கோஷம் எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்பினர்.




**மெஸ்சி உருவச்சிலை....**

கொல்கத்தாவில் லேக் டவுன் பகுதியில் ஸ்ரீபூமி விளையாட்டு கிளப் சார்பில் 70 அடி உயரத்தில் மெஸ்சியின் உருவச்சிலை நிறுவப்பட்டுள்ளது. கையில் உலக கோப்பையை பிடித்திருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ள இந்த சிலையை மெஸ்சி காணொலி மூலம் திறந்து வைத்தார். அப்போது இந்தியா மற்றும் அர்ஜென்டினாவின் கொடிகளை ரசிகர்கள் உயர பிடித்தபடி இருந்தனர்.

**பிரமாண்ட நிகழ்ச்சி....**

மெஸ்சியின் வருகையையொட்டி அங்குள்ள 78 ஆயிரம் இருக்கை வசதி கொண்ட சால்ட் லேக் மைதானத்தில் பிரமாண்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கான டிக்கெட்டுகள் ரூ.7 ஆயிரம் வரை விற்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மெஸ்சி சில நிமிடங்கள் மட்டுமே அங்கிருந்ததாக கூறப்படுகிறது. சிறிது நேரத்தில் அவர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

**சூறையாடினர்...**

மெஸ்சி மீண்டும் மைதானத்துக்கு வருவார் என்று ரசிகர்கள் காத்திருந்த நிலையில் வராததால், ஆத்திரமடைந்த அவர்கள் மைதானத்துக்குள் புகுந்து டெண்டுகளை சூறையாடினர். ரசிகர்களை கட்டுப்படுத்த போலீசார் தடியடி நடத்தினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

**ரசிகர்கள் குமுறல்...**

இதுதொடர்பாக ரசிகர் ஒருவர் கூறும்போது, "மிகவும் மோசமான நிகழ்வு. மெஸ்சி வெறும் 10 நிமிடங்கள் மட்டுமே இருந்தார். தலைவர்களும், அமைச்சர்களும் அவரை சூழ்ந்திருந்தனர். எங்களால் பார்க்க முடியவில்லை. எங்கள் பணம் மற்றும் நேரம் வீணடிக்கப்பட்டுள்ளது" என்றார். மற்றொரு ரசிகர் கூறும்போது, "தலைவர்களும், நடிகர்களும் மட்டுமே மெஸ்சியைச் சுற்றி இருந்தார்கள். பிறகு ஏன் எங்களை அழைத்தார்கள். 12 ஆயிரத்துக்கு டிக்கெட் வாங்கினோம், ஆனால் நாங்கள் அவரது முகத்தைக் கூட பார்க்க முடியவில்லை" என்று தெரிவித்தார்.

**பிரதமருடன் சந்திப்பு...**

கொல்கத்தா பயணத்தை முடித்துக் கொண்டு, மெஸ்சி பிற்பகலில் ஐதராபாத்துக்கு சென்றார். இன்று மும்பைக்கு செல்லும் அவர் அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். 15-ம் தேதி டெல்லிக்கு புறப்படும் மெஸ்சி பிரதமர் மோடியுடன் கலந்துரையாடுகிறார்.

## மெஸ்ஸியுடன் ஷாருக்கான் சந்திப்பு



கொல்கத்தாவில், கால்பந்து ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸியை பிரபல பாலிவுட் நடிகர் ஷாருக்கான் நேரில் சந்தித்துள்ளார். 'கோட் டூர் ஆஃப் இந்தியா' எனும் திட்டத்தின்படி அர்ஜெண்டினா கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி இந்தியாவில் 3 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இதன்படி, நேற்று அதிகாலை கொல்கத்தா வந்தடைந்த மெஸ்ஸிக்கு விமான நிலையத்தில் ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இந்த நிலையில், லேக் டவுன் திடலில் பிரபல பாலிவுட் நடிகர் ஷாருக்கான் மற்றும் அவரது இளைய மகன் அப்ராம் ஆகியோர் கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸியை நேரில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில், அவர்கள் மூவரும் கைகுலுக்கி உரையாடியதோடு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இந்த விடியோக்கள் இணையத்தில் வெளியாகி இருவரது ரசிகர்களிடையே மிகவும் வைரலாகி வருகின்றது.

## ஏழு படையப்பன் தோனி



நடிகர் ரஜினிகாந்தின் 75-வது பிறந்தநாள் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, 'படையப்பா' திரைப்படம் ரீ-ரிலீஸானது. கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த், சவுந்தர்யா மற்றும் ரம்யா கிருஷ்ணன், சிவாஜி நடித்த 'படையப்பா' படம் 1999-ல் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், எம்.எஸ்.தோனியை ஏழு படையப்பன் என பெயரிட்டு, புகைப்படம் ஒன்றை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி எக்ஸ் வலைதளத்தில் பகிர்ந்து உள்ளது. அதில், ரஜினி துண்டை தோளில் போடுவது போன்று, தோனி துண்டை தோளில் போட்டு இறங்கி நடந்து வரும் புகைப்படம் வெளியிடப்பட்டு உள்ளது. தோனியின் ராசியான எண் ஏழு. அதனை குறிக்கும் வகையில் ஏழு படையப்பன் என சி.எஸ்.கே. பெயரிட்டு உள்ளது.

## ஷ்ரேயாஸ் உடன் காதலா?

இந்திய கிரிக்கெட் வீரர் ஷ்ரேயாஸ் அய்யரும் நடிகை மிருணாள் தாகூரும் ரகசியமாக காதலித்து வருவதாக இணையதளத்தில் தகவல் கசிந்தது. இந்நிலையில் இந்த வதந்திக்கு மிருணாள் தாகூர் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக பதிலளித்துள்ளார். அதில், பிரபலங்களாக இருப்பவர்கள் என்றால் விமர்சனங்களும் வதந்திகளும் வாழ்க்கையின் ஒரு பகுதியாகிவிடும்.

ஆரம்ப காலங்களில் அவை எனக்கு சிரமமாக இருந்தது. ஆனால் இப்போது 'இதுவா?' என்று எளிதாக கடந்து செல்ல கற்றுக்கொண்டேன். தேவையற்ற விமர்சனங்களை நான் கவனிக்கவே மாட்டேன். எந்த வதந்தியும் என் மனநிலையையோ, என் வாழ்க்கையையோ பாதிக்காது" என்று அவர் கூறினார்.

### மேகதாது அணை விவகாரத்தில் மறுசீராய்வு மனு:
# தமிழ்நாடு அரசுக்கு விவசாயிகள் சங்கம் நன்றி

சென்னை, டிச. 14-

மேகதாது அணை விவகாரம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்த தமிழக அரசுக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது :-

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு தங்களுக்கு சாதகமாக வெளிவந்ததால், கர்நாடக அரசு மேகதாது அணைக்கான பணிகளை தொடங்கி விட்டது. தமிழ்நாடு அரசு, சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பை மறு ஆய்வு செய்திட வலியுறுத்தி 11.12.2025 அன்று சீராய்வு மனுவை தாக்கல் செய்திருக்கிறது. மத்திய நீர்வள குழுமத்திடமும் 9.12.2025 அன்று ஒரு விரிவான அறிக்கையை தமிழ்நாடு அரசு கொடுத்திருக்கிறது.

காவிரி நடுவர் மன்ற தீர்ப்புக்கு பின் தொடுக்கப்பட்ட வழக்குகளின் விசாரணை முடிவில் 16.2.2018 அன்று வெளியிட்ட சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புக்கு எதிரான செயல் இது என தமிழ்நாடு அரசு இதில் குறிப்பிட்டிருப்பது நியாயமானது. இந்த தீர்ப்பு வந்த உடனேயே தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாநில அளவில் தஞ்சாவூரில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியதுடன்... சுப்ரீம் கோர்ட்டில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்திட வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தோம். எனவே தமிழக முதல்வரை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பாராட்டி நன்றி கூறுகிறோம்.

இதற்கு முன்பே காவேரி காவிரியின் குறுக்கே மேகதாது எனும் இடத்தில் புதிய அணையை கட்டிட கர்நாடக அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது. இதற்காக பல்வேறு யுக்திகளை கடைப்பிடித்து வருகிறது. முதலில் மத்திய அரசின் நீர்வளத் துறையிடம் அனுமதி கோரியது. மத்திய சுற்றுச்சூழல் துறையிடம் இதற்கான அறிக்கை கொடுத்து அனுமதி கோரியது. இத்துறையும் விரிவான அறிக்கையை கர்நாடக அரசிடம் கேட்டிருந்தது.

அதன் அடிப்படையில் ஆணையக்கூட்டத்தில் இதை விவாதப்பொருளில் சேர்த்து விவாதித்திடும் நிலையில் நிகழ்ச்சி நிரலில் சேர்த்து இருந்ததை தமிழகத்தின் எதிர்ப்பால் தாங்கள் நினைத்ததை சாதிக்க முடியாமல் காவிரி ஆணையம் ஒத்தி வைத்தது. பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்பட்டதில் தமிழ்நாடு அரசின் சார்பாக பங்கு கொண்ட நமது உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்து முறியடித்தனர்.

இதன்பின்தான் காவிரி ஆணையக்கூட்டத்தில் மேகதாது அணைக்கான அறிக்கையை விவாதித்திட காவிரி ஆணையத்திற்கு உத்தரவிட வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டில் ஒரு மனுவை கர்நாடகம் தாக்கல் செய்தது. தமிழ்நாடு அரசு இதை எதிர்த்து வாதாடிய நிலையிலும் காவேரி ஆணையக்கூட்டத்தில் கர்நாடக அரசு மேகதாது அணைக்கான விரிவான அறிக்கையை தாக்கல் செய்யலாம் என சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது என்பது தமிழகத்திற்கான அநீதியாகும்.

ஆணையமும், மத்திய அரசின் ஜல் சக்தி துறையும், இதற்கு இசைவாக இருக்கும் நிலையில் இந்த தீர்ப்பு விரைவாக மேகதாது அணை கட்டுமானத்திற்கான அனுமதியாக கருதி, கர்நாடக அரசு இதற்கான செயல்பாட்டை தீவிரப்படுத்தி உள்ளது. நவம்பர் 18-ந்தேதி கர்நாடகத்தின் துணை முதல்வர் டி.கே.சிவகுமார் கர்நாடக நீர்பாசனத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின் இந்த அணை கட்டுமானத்திற்கான 30 பேர் கொண்ட தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் பொறியாளர்கள் குழுவை அமைத்ததுடன், செயல்படுத்திடும் பொறுப்பை கர்நாடக இன்ஜினியரிங் ஆராய்ச்சி நிலைய இயக்குனரித்திடம் கர்நாடக அரசு ஒப்படைத்துள்ளது.

அடுத்து காவிரி ஆணைய கூட்டத்தில் இதை விவாதிக்கும் நிலையில், மேகதாது அணைக்கான கருத்துருவை கொடுப்பதற்கும் தயாராக உள்ளது. விவாதிப்பது தானே என்று அலட்சியமாக இருந்தால் இந்த முதல் கட்ட நடவடிக்கையே கர்நாடகத்தின் சாதகமான நிலையாக எடுத்து கொள்ளப்படும். எனவே மறுசீராய்வு மனு உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வகையில் தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்திட வேண்டும். மேலும் இதனால் பாதிக்கப்பட இருக்கிற கேரளா மற்றும் புதுச்சேரி அரசுகளும் தனித்தனி மனுக்களை தாக்கல் செய்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கொல்கத்தா லேக் டவுன் பகுதியில்
# தனது 70 அடி உயர சிலையை திறந்து வைத்தார் மெஸ்சி

கொல்கத்தா, டிச. 14-

கொல்கத்தாவில் லேக் டவுன் பகுதியில் ஸ்ரீபூமி விளையாட்டு கிளப் சார்பில் 70 அடி உயரத்தில் நிறுவப்பட்டுள்ள தனது முழுவுருவச்சிலையை மெஸ்சி நேற்று திறந்து வைத்தார்.

**3 நாள் பயணமாக...**

அர்ஜென்டினா அணியின் கேப்டனான பிரபல கால்பந்து வீரர் லயோனல் மெஸ்சி 14 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியாவுக்கு வந்துள்ளார். 3 நாள் சுற்றுப்பயணத்தின்படி, இந்தியாவின் கொல்கத்தா நகருக்கு நேற்று அதிகாலை வருகை தந்த அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை காண்பதற்காக ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த கால்பந்து ரசிகர்கள் மிகுந்த உற்சாகத்துடன் கோஷம்



எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்பினர்.

**70 அடி உயரத்தில்...**

கொல்கத்தாவில் லேக் டவுன் பகுதியில் ஸ்ரீபூமி விளையாட்டு கிளப் சார்பில் 70 அடி உயரத்தில் மெஸ்சியின் உருவச்சிலை நிறுவப்பட்டுள்ளது. கையில் உலக கோப்பையை பிடித்திருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ள இந்த சிலையை மெஸ்சி காணொலி மூலம் திறந்து வைத்தார். அப்போது இந்தியா மற்றும் அர்ஜென்டினாவின் கொடிகளை ரசிகர்கள் உயர பிடித்தபடி இருந்தனர்.

**ரூ.7 ஆயிரம் வரை...**

மெஸ்சியின் வருகையையொட்டி அங்குள்ள 78 ஆயிரம் இருக்கை வசதி கொண்ட சால்ட்லேக் ஸ்டேடியத்தில் பிரமாண்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான டிக்கெட்டுகள் ரூ.7 ஆயிரம் வரை விற்கப்பட்டு உள்ளன. இதில் மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி, முன்னாள் கிரிக்கெட் வீரர் சவுரவ் கங்குலி, முன்னாள் டென்னிஸ் வீரர் லியாண்டர் பெயஸ், நடிகர் ஷாருக்கான் உள்பட பிரபலங்கள் பங்கேற்றனர்.

### சால்ட் லேக் திடலில் ரசிகர்கள் கலவரம்:
# மெஸ்ஸி, ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்ட முதல்வர் மம்தா பானர்ஜி
### விசாரணை ஆணையம் அமைப்பு

கொல்கத்தா, டிச. 14-

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி சால்ட் லேக் திடலில் நடைபெற்ற பெருங்குழப்பத்துக்கு மெஸ்ஸியிடமும் ரசிகர்களிடமும் மன்னிப்பு கேட்டுள்ளார்.

மெஸ்ஸியைப் பார்க்க முடியாத ரசிகர்கள் சால்ட் லேக் திடலை சூறையாட, காவல்துறையினர் தடியடி நடித்து கலைத்தனர். இது இந்திய அளவில் கவனம் ஈர்த்தது. இது குறித்து மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டதாவது: சால்ட் லேக் திடலில் நடைபெற்ற மோசமான ஏற்பாட்டிற்கு நான் மிகவும் கவலையும் அதிர்ச்சியும் அடைந்தேன். பல்லாயிரக்கணக்கான ரசிகர்களுடன் சேர்ந்து நானும் மெஸ்ஸியைப் பார்க்க திடலுக்கு வந்து கொண்டு இருந்தேன். இந்த எதிர்பாராத நிகழ்வுக்கு மெஸ்ஸி மற்றும் கால்பந்து ரசிகர்களிடம் நான் மிகுந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வுபெற்ற நீதிபதி ஆஷிம்குமார் ராய் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்று அமைக்கிறேன். இந்த ஆணையத்தில் தலைமைச் செயலர், கூடுதல் தலைமைச் செயலர், உள்துறை மற்றும் மலை அமைச்சர் நபர்களாகச் செயல்படுவார்கள். இந்த நிகழ்வு குறித்த முழுமையான விசாரணையை இந்த ஆணையம் மேற்கொள்ளும். யார் பொறுப்பு என்பதையும் இனிமேல் இந்த மாதிரி நடக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதற்கும் ஆணையம் விசாரிக்கும். விளையாட்டு ரசிகர்களிடம் மீண்டும் ஒருமுறை மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

### இளையோர் ஆசிய கோப்பை கிரிக்கெட்
# சூர்யவன்ஷி புதிய சாதனை

துபாய், டிச. 14-

இளையோர் ஒரு நாள் கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்சில் அதிக சிக்சர் அடித்தவர் என்ற புதிய சாதனையை இந்தியாவின் இளம் வீரர் சூர்யவன்ஷி படைத்துள்ளார்.

**8 அணிகள்...**

19 வயதுக்குட்பட்டோருக்கான 12-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி (இளையோர்) துபாயில் தொடங்கியது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் 8 முறை சாம்பியனான இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, ஐக்கிய அரபு அமீரகம் அணிகளும், 'பி' பிரிவில் இலங்கை, ஆப்கானிஸ்தான், நடப்பு சாம்பியன் வங்காளதேசம், நேபாளம் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

**இரட்டை சதத்தை...**

தொடக்க நாளில் இந்திய அணி, ஐக்கிய அரபு அமீரகத்தை எதிர்கொண்டது. டாஸ் ஜெயித்த அமீரக கேப்டன் யாயின் கிரண் ராய் முதலில் இந்தியாவை பேட் செய்ய அழைத்தார். இதன்படி கேப்டன் ஆயுஷ் மாத்ரே




வும், வைபவ் சூர்யவன்ஷியும் இந்தியாவின் இன்னிங்சை தொடங்கினர். மாத்ரே (4 ரன்) ஏமாற்றம் அளித்தாலும், சூர்யவன்ஷி ருத்ரதாண்டவமாடினார். சிக்சரும், பவுண்டரியுமாக நொறுக்கிய அவர் எந்த பந்து வீச்சாளரையும் விட்டுவைக்கவில்லை. பந்து நாலாபுறமும் ஓடிக்கொண்டே இருந்தது. 56 பந்துகளில் சதத்தை எட்டிய அவர் இரட்டை சதத்தை நோக்கி வேகமெடுத்தார்.

**புதிய சாதனையை...**

ஆனால் 33-வது ஓவரில் முட்டிப்போட்டு பந்தை லெக்சைடு திருப்பி விட முயன்ற போது போல்டாகிப் போனார். அவர் 171 ரன்களில் (95 பந்து, 9 பவுண்டரி, 14 சிக்சர்) வெளியேறினார். இளையோர் ஒரு நாள் கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்சில் அதிக சிக்சர் அடித்தவர் என்ற புதிய சாதனையை படைத்தார். இதற்கு முன்பு ஆஸ்திரேலியாவின் மைக்கேல் ஹில் 2008-ம் ஆண்டில் 12 சிக்சர் சிக்சர் எடுத்ததே இந்த வகையில் அதிகபட்சமாக இருந்தது.

**அதிகபட்ச ஸ்கோர்...**

சூர்யவன்ஷிக்கு, ஆரோன் ஜார்ஜ் (69 ரன்) நன்கு ஒத்துழைப்பு தந்தார். விஹான் மல்கோத்ரா (69 ரன்), வேதாந்த் திரிவேதி (38 ரன்), அபிக்யான் குண்டு (32 ரன்), கனிஷ்க் சவுகான் (28 ரன்) ஆகியோரும் கணிசமான பங்களிப்பை அளித்தனர். நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் இந்திய அணி 6 விக்கெட்டுக்கு 433 ரன்கள் குவித்து மலைக்க வைத்தது. 19 வயதுக்குட்பட்டோர் ஒரு நாள் கிரிக்கெட்டில் இந்தியாவின் அதிகபட்ச ஸ்கோர் இதுவாகும். பின்னர் இமாலய இலக்கை நோக்கி களம் இறங்கிய ஐக்கிய அரபு அமீரக அணியால் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 199 ரன்களே எடுக்க முடிந்தது. இதனால் இந்தியா 234 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

## ஆட்டநாயகன் விருது

இந்த போட்டியில் உத்திஷ் சூரி 78 ரன்கள் எடுத்தார். இந்திய தரப்பில் மொத்தம் 9 பவுலர்கள் பந்து வீசினர். தீபேஷ் 2 விக்கெட் வீழ்த்தினார். சூர்யவன்ஷி ஆட்டநாயகன் விருதை வென்றார்.

### காப்பீட்டு துறையில் 100 சதவீத
# அந்நிய நேரடி முதலீடு: மத்திய அரசு ஒப்புதல்

புதுடெல்லி, டிச. 14-

காப்பீட்டு துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தியாவில் காப்பீட்டு துறையை வளர்ச்சி அடைய செய்யவும், அதன் உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான நிதியை அதிகரிக்க செய்யும் நோக்கில் காப்பீட்டு துறையில் சில முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, காப்பீட்டு துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்க அரசு திட்டமிட்டு உள்ளது.

இதற்காக காப்பீட்டு சட்டங்கள் (திருத்த) மசோதாவை அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இதுவரை 74 சதவீதம் என்ற அளவில் அந்நிய நேரடி முதலீடு உள்ளது. இந்த மசோதா அறிமுகத்திற்கு பின்னர் காப்பீட்டு துறையில், 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி அளிக்கப்படும். இதனால், வெளிநாட்டு நிறுவனங்கள் போதிய பாதுகாப்பு நடைமுறைகளுடன் தங்களுடைய நிர்வாக விவகாரங்களை மேற்கொள்வது எளிமையடையும். முழு சுதந்திரத்துடன் அந்த பணிகளை மேற்கொள்ளும்.

2047-ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் காப்பீடு என்ற இலக்கை அடையும் அரசின் திட்டமும் இதனால் வலுபெறும். இதன்படி, சூழலுக்கு ஏற்ப வருகிற திங்கட்கிழமை அந்த மசோதா தாக்கல் செய்யப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. நடப்பு குளிர்கால கூட்டத்தொடரிலேயே இதனை தாக்கல் செய்ய முடிவாகி உள்ளது. எதிர்க்கட்சிகளின் அமளிக்கு இடையே இந்த மசோதாவை தாக்கல் செய்து, நிறைவேற்ற அரசு தீவிரம் காட்டி வருகிறது. அதனுடன், இந்த மசோதாவின் மூலம் முக்கிய சீர்திருத்தங்களையும் கொண்டு வர அரசு திட்டமிட்டு உள்ளது. இதனால், எளிதில் வர்த்தகம் செய்வது மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆகியவை மேற்கொள்ளப்படும். சில நடைமுறைகளும், விதிகளும் எளிமைப்படுத்தப்படும் என தகவல் தெரிவிக்கின்றது.

# வன்னியர்களுக்கு 13 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கியது தி.மு.க.
### அமைச்சர் பெரியசாமி பேச்சு

திண்டுக்கல், டிச. 14-

வன்னியர்களுக்கு 13 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கியது தி.மு.க.தான் என்று அமைச்சர் பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல்லில் 2-ம் கட்டமாக விடுபட்ட மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் இ.பெரியசாமி கலந்து கொண்டு அவர்களுக்கு நலத்திட்டங்களை வழங்கினார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றபோது கொரோனா தொற்று பரவல் காரணமாக கடும் நெருக்கடி இருந்தது. வருவாய் பற்றாக்குறையாக ரூ.60 ஆயிரம் கோடியை அ.தி.மு.க.வினர் விட்டுச் சென்றனர். அதன் காரணமாகவே மகளிர் உரிமைத் தொகை வழங்க சில மாதங்கள்தாமதமானது. இருந்தபோதும் ஒரு கோடிக்கும் அதிகமான மகளிர்களுக்கு உரிமைத்தொகை வழங்கப்பட்டது. மகாராஷ்டிரா, டெல்லி போன்ற மாநிலங்களில் கூட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு முறையாக வழங்கப்படவில்லை. ஆனால் தி.மு.க. அரசு மக்களை ஏமாற்றாமல் சொன்னதை சொன்னபடி நிறைவேற்றி வருகிறோம்.

வரலாற்றில் இல்லாத அளவிற்கு தி.மு.க. அரசு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஆனால் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் எந்த திட்டத்தையும் ஒழுங்காக செயல்படுத்தவில்லை. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சொல்வதை மக்கள் நம்புவார்கள். ஆனால் பா.ஜ.க. குறைகூறுவதை அவர்கள் ஏற்கமாட்டார்கள். கடந்த 1½ ஆண்டுகளில் 2 லட்சம் வீடுகள் கட்டித்தரப்பட்டது எந்த ஆட்சியிலாவது நடந்ததுண்டா. ரூ.2 ஆயிரம் கோடி செலவில் ஒருலட்சம் வீடுகள் பழுது நீக்கம் மற்றும் 25 ஆயிரம் புதிய வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டுகளில் சாலை இல்லாத கிராமங்களுக்கு 23 ஆயிரம் கி.மீ. கிராமச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

வன்னியர் இட ஒதுக்கீடு1989-ம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் முதல் தீர்மானமாக வன்னியர்களுக்கு 20 சதவீத இட ஒதுக்கீடு அறிவித்தவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி. தற்போது வன்னியர்கள் 10.5 சதவீத இடஒதுக்கீடு கேட்டு வருகின்றனர். ஆனால் 20 சதவீத இடஒதுக்கீட்டில் 13 சதவீதம் பேர் பயன் அடைந்து வருகின்றனர். என்னிடம் புள்ளி விவரம் உள்ளது. இதில் தென்மாவட்டங்களில் முக்குலத்தோர், பிரமலைக்கள்ளர், மறவர் என 20 சதவீதம் இட ஒதுக்கீட்டில் உள்ளனர். அவர்களுக்கு பெரிய அளவில் ஒதுக்கீடு போவதில்லை.

வன்னியர் சமுதாயத்திற்கே கேட்கும் அளவை விட கூடுதலாக இருக்கிறது. கேட்பது அவர்களின் உரிமை. தனியாக பிரித்து வன்னியர்களுக்கு என கேட்கின்றனர். பொதுவாகத்தான் அரசு முடிவு எடுக்க முடியும். கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் கொடுத்த இடஒதுக்கீட்டில் கன்னியாகுமரி கிறிஸ்தவர்கள் இடஒதுக்கீடு வேண்டாம் என பாதிரியாளர்கள் முதலமைச்சரிடம் கேட்டார்கள். அதனை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். 69 சதவீத இட ஒதுக்கீட்டில் அனைத்து சமுதாயத்திற்கும் எவ்வளவு கொடுக்க வேண்டும் என முதலமைச்சர் முடிவு செய்வார்.

பா.ஜ.க.விற்கு இருக்கும் ஆயுதம் அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, தேர்தல் ஆணையம் போன்றவை. வழக்கு போட்டு ஜனநாயக நாட்டில் ஒரு அரசை முடக்கலாம் என்று நினைத்தால் நடக்காது. எத்தனை வழக்கு போட்டாலும் நீதிமன்றத்தில் நிற்காது. பா.ஜ.க.விடம் உள்ள ஆயுதங்கள் பழுதடைந்தவை. ஆனால் எங்களின் ஆயுதம் வலிமையானவை. இவ்வாறு அவர் கூறினார்.

### மெஸ்ஸி நிகழ்ச்சியில் பங்கேற்ற
# ரசிகர்களுக்கு டிக்கெட் கட்டணம் திருப்பி தரப்படும் என அறிவிப்பு

கொல்கத்தா, டிச. 14-

மெஸ்ஸி நிகழ்ச்சியில் பங்கேற்ற ரசிகர்களுக்கு டிக்கெட் கட்டணம் திருப்பி தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

'கோட் டூர் ஆஃப் இந்தியா 2025' என்ற பயணத்தின்படி மெஸ்ஸி நேற்று அதிகாலை லியோ மெஸ்ஸி கொல்கத்தா வந்தார். நேற்று அதிகாலை கொல்கத்தா வந்த லியோனல் மெஸ்ஸி முதலில் தனது 70 அடி உயர சிலையை காணொலி வாயிலாக திறந்து வைத்தார். பின்னர், சால்ட் லேக் திடலுக்கு வந்தார். அங்கு கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அடுத்ததாக மோகன் பகான் அணியின் மெஸ்ஸி ஆல் ஸ்டார் அணியும் டையமண்ட் ஆர்பர் ஆல் ஸ்டார் அணியும் விளையாட இருந்தது.

மெஸ்ஸி சால்ட் லேக் திடலை விட்டு சென்றதால், ரசிகர்கள் நாற்காலிகளை தூக்கி வீசத் தொடங்கினார்கள். இதனால் சால்ட் லேக் திடலே போர்க்களம் போல் காட்சி அளித்தது. இதனை அடுத்து இந்த வன்முறையைக் கட்டுப்படுத்த காவல் துறையினர் லேசான தடியடி நடத்தினர். மெஸ்ஸி டதங்கியிருக்கும் விடுதிக்கு அருகிலும் கூட்டம் கூடியதால் தடியடி நடத்தப்பட்டது.

டிக்கெட் மோசடி நடந்ததாகக் கூறப்பட்ட நிலையில், இது குறித்து மேற்கு வங்கத்தின் டி.எஸ்.பி. ராஜீவ் குமார் பேசியதாவது: மெஸ்ஸி விளையாடாமல் சென்றதால் ரசிகர்களிடம் பதற்றம் அல்லது கோபம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. மெஸ்ஸி இங்கு வந்து, ரசிகர்களைப் பார்த்து கை அசைத்துவிட்டு, சிலரைச் சந்தித்துவிட்டு செல்வதுதான் திட்டம். இதில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் எதாவது தவறு செய்துள்ளார்களாக என்பது குறித்து விசாரிக்க ஓர் ஆணையம் அமைக்கப்பட்டும். பணம் திருப்பி அளிக்கப்படுமென விழா ஏற்பாட்டாளர்கள் எழுதிக் கொடுத்துள்ளார். சூழ்நிலை கட்டுக்குள் இருக்கிறது. ஏற்கெனவே, விழா ஏற்பாட்டாளர்களை காவலில் வைத்துள்ளோம் என்றார்.

# இந்தியாவிலேயே உயர் கல்வி படிக்கும் மாணவர்களில் தமிழ்நாடு முதலிடம்: அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு



**ஒட்டன்சத்திரம், டிச. 14-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ பாலிடெக்னிக் கல்லூரியில் திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசியதாவது, தமிழ்நாடு முதலமைச்சர் எல்லாருக்கும் எல்லாம் என்று வகையில் சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார் , தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்பு படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் வகையில் மாவட்டம் தோறும் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கும் மாநிலத்தில் தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது, தமிழ்நாட்டில் 55 சதவீதம் மாணவர்கள் உயர்கல்வி பயில்கின்றனர், புதுமைப் பெண் திட்டத்தால் பெண்களின் கல்வி 33 சதவீதம் உயர்ந்துள்ளது. கல்விக்கு மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பள்ளி கல்வித்துறைக்கு முதலமைச்சர் 18 வகையான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார், படிக்கும் மாணவர்களின் எண்ணங்கள் வானுயர இருக்க வேண்டும் என்று பேசினார். நிகழ்வில் தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் சதீஷ் பாபு, வேலைவாய்ப்பு மண்டல இணை இயக்குனர் திருமலைச்செல்வி,மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அருண்நேரு, நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி, மாவட்ட அவைத் தலைவர் மோகன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், தர்மராஜ், பொன்ராஜ், பாலு, சுப்ரமணி, செயற்குழு உறுப்பினர் கண்ணன், பாலிடெக்னிக் முதல்வர் தினகரன், உள்ளிட்ட ஏராளமான இளைஞர்கள் பெண்கள் கலந்து கொண்டனர்

# பரமக்குடி சந்தை கடை தெரு பகுதி 33-வது வார்டில் புதிய ரேஷன் கடை

## முருகேசன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்



**பரமக்குடி, டிச 14-**

பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட 33-வது வார்டில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2025-2026 கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடை கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி திறந்து வைத்தார்.நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி துணைத்தலைவர் குணா என்ற குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வார்டு செயலாளர் வீரபாண்டி வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் பரமக்குடி வட்ட வழங்க அலுவலர் கோகுல்,திமுக பொதுக்குழு உறுப்பினர் எஸ். எம்.டி. அருளானந்த்,நகர் மன்ற உறுப்பினர் பழனி முத்துக்குமார்,தர்மராஜ், நகர் துணைச் செயலாளர் கலீல் ரகுமான், நகர் பொருளாளர் ஜானகிராமன்,வார்டு செயலாளர் சுரேஷ், தெற்கு நகர் இளைஞரணி துணை அமைப்பாளர் மனிஷ்,மதிமுக நகர் செயலாளர் பிச்சைமணி, இளைஞர் அணி நந்தகுமார், முருகன்,அசரப் மற்றும் நிர்வாகிகள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஊழலுக்கு எதிராக அ.தி.மு.க. சார்பில் விரைவில் போராட்டம்:

# தங்கத்தையே அள்ளி கொடுத்தாலும் ஒருபோதும் தி.மு.க.வுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேட்டி



**மதுரை, டிச 14-**

ஊழலுக்கு எதிராக அ.தி.மு.க. சார்பில் போராட்டம் நடத்த உள்ளோம்.தி.மு.க. தங்கத்தை அள்ளி கொடுத்தாலும் தி.மு.க.வுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

இது குறித்து மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் பேசியதாவது-

மதுரை மாநகராட்சி நகரமைப்பு பிரிவில் ஊழல் நடைபெற்றுள்ளது. நகரமைப்பு பிரிவின் ஊழலுக்கு எதிராக அ.தி.மு.க. சார்பில் போராட்டம் நடத்த உள்ளோம். அதனை தொடர்ந்து நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்க உள்ளோம்.வீடுகளுக்கு அனுமதி பெற்று வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள் கட்டப்படுகிறது. மதுரை மாநகராட்சி நிர்வாகம் மிக மோசமான நடைபெறுகிறது. மக்களின் பிரச்சினைகளை மாநகராட்சி நிர்வாகம் கண்டு கொள்வதில்லை. மாநகராட்சிக்கு மேயர், மண்டலத் தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள் நியமிக்க வேண்டும். தி.மு.க. தங்கத்தை அள்ளி கொடுத்தாலும் தி.மு.க.வுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். தி.மு.க. அரசு நான்கே முக்கால் வருடத்தில் மதுரை மக்களுக்கு என்ன செய்தது?, அ.தி.மு.க. கொண்டு வந்த திட்டங்களை தி.மு.க. திறந்து வைக்கிறது.தி.மு.க. ஆட்சி வந்தவுடன் விமான நிலையம் விரிவாக்கத்திற்கு நிலம் எடுக்கும் பணிகள் 2 மாதங்களில் முடிவடையும் என சொன்னார்கள்.ஆனால், கனிமொழி எம்.பி-ஆக இருப்பதால் தூத்துக்குடி விமான நிலையம் சர்வதேச தரத்துடன் செயல்பட தொடங்கியுள்ளது. முதல்வர், துணை முதல்வர், அமைச்சர்கள் என யார் என்ன பேசினாலும் அடுத்து ஆளப்போவது அ.தி.மு.க. மட்டுமே. அ.தி.மு.க.வை விமர்சனம் செய்யவில்லை என்றால் முதலமைச்சருக்கு நேரம் போகாது, தூக்கம் வராது. தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகள் தி.மு.க.வின் அடிமைகளாக செயல்படுகிறது. ஆனால் அ.தி.மு.க.வை அடிமை கட்சி என விமர்சனம் செய்கிறது. ஒரு அடிமை தான் இன்னொருவரை அடிமை என சொல்லுவார்கள். அதனால் தான் தி.மு.க. கூட்டணி கட்சிகள் எங்களை அடிமை என விமர்சனம் செய்கிறது. அரிதாரம் பூசியவனால் ஆட்சி நடத்த முடியுமா என எம்.ஜி.ஆரை தி.மு.க. விமர்சனம் செய்தது. ஆனால், தி.மு.க.வை பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் செல்ல செய்தவர் எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆர் மறைந்தும் தி.மு.க.விற்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறார். எம்.ஜி.ஆரின் புகழை பாடாதோர் எவருமுண்டா?, முதலமைச்சர் கூட எம்.ஜி.ஆரை பெரியப்பா என கூறினார். முதலமைச்சரின் பெரியப்பாவை கேலி, கிண்டல் செய்யும் திமுகவினரை முதல்வர் கண்டிக்க வேண்டாமா? . இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர். அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் உசிலை ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், கே.எஸ்.சுப்பு, கவிதாஸ் மற்றும் மாமன்ற எதிர்கட்சி தலைவர் சோலை ராஜா, சண்முகவள்ளி, வசந்தாதேவி, ரூபினிகுமார், ஜெ.மாணிக்கம், ஏ.மாயத்தேவன், பைக்காரா கருப்பசாமி, முத்துமாரி ஜெயக்குமார், கிருஷ்ணமூர்த்தி, பி.கே.எம்.என். மாரிமுத்து, எஸ்.எம்.டி.ரவி, நாகஜோதிசித்தன், பிரேமா டிமிட்டிராவ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# நத்தம் அருகே கலையரங்கம், உயர்கோபுர மின் விளக்கு திறப்பு



**நத்தம், டிச. 14-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சாணார்பட்டி ஒன்றியம் ஆவிளிப்பட்டி ஊராட்சி களத்துப்பட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து 10 லட்சம் மதிப்பில் கலையரங்கம், தவசிமடையில் ரூ.5 லட்சம மதிப்பில் உயர் கோபுரமின் விளக்கு கட்டப்பட்டு அதற்கான திறப்பு விழா நடந்தது. இதற்கு திமுக மாவட்ட பொருளாளர் விஜயன் தலைமை தாங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம், ஒன்றிய செயலாளர்கள் தர்மராஜன்,மோகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒன்றிய செயலாளர் வெள்ளைக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் எம்.பி. கலந்து கொண்டு கலையரங்கம், உயர் கோபுர விளக்கை திறந்து வைத்தார். இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நத்தம் ஒன்றிய செயலாளர் குழந்தைவேல், உள்ளிட்ட திமுக, கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ராமநாதபுரத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகையை வனத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் வழங்கினார்



**ராமநாதபுரம்,டிச.14-**

ராமநாதபுரத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகையினை பயனாளிகளுக்கு அமைச்சர் ராஜகண்ணப்பன் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் 2ஆவது கட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததையொட்டி, ராமநாதபுரம் எம்.ஜி மஹாலில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தலைமை வகித்தார். ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில், வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் 2ஆவது கட்ட விரிவாக்கத் திட்டத்தில் பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டையினை வழங்கினார்கள். இதன் மூலம் மாவட்டத்தில் 25,261 பயனாளிகள் பயன்பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது,

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் வ.சங்கரநாராயணன், ராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம், ராமநாதபுரம் நகர் மன்ற துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் கிருஷ்ணகுமாரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் தி.கார்த்திக்கேயன், ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் செ.ஹபிபூர் ரஹ்மான் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வத்தலக்குண்டு ஒன்றியம் கணவாய்ப்பட்டி ஊராட்சியில் ஆழ்துளை கிணறு அமைக்க பூமி பூஜை



**வத்தலகுண்டு, டிச.14-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கணவாய்ப்பட்டி ஊராட்சி கணபதி நகரில், ஆழ்துளை கிணறு அமைக்க பூமிபூஜை விழா நடந்தது. இதில் கணவாய்ப்பட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ரமேஷ் தலைமை தாங்கி பூமி பூஜை பணியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஊராட்சி செயலர் முத்துக்குமார். தொழில்நுட்ப ட்ப உதவியாளர் ராஜா, ஊராட்சி கணினி உதவியாளர் உதவியாளர் வினோத், நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் மக்கள் நீதிமன்றம்: ஐகோர்ட் நீதிபதி பங்கேற்பு




**நத்தம், டிச.14-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் நீதிமன்ற வளாகத்தில் வட்ட சட்ட பணிகள் குழு சார்பாக தேசிய லோக் அதாலத் என்ற மக்கள் நீதிமன்றம் நடைபெற்றது. இதற்கு மதுரை ஐகோர்ட்டு கிளை நீதிபதி தண்டபாணி கலந்து கொண்டு வாகன விபத்தில் இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ.23 லட்சத்திற்கான காசோலையையும், செக்மோசடி வழக்கில் ஒருவருக்கு ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையையும் வழங்கினார். தொடர்ந்து பேசிய நீதிபதி தண்டபாணி.... மக்களை சந்தித்து அவர்களை குறைகளை கேட்பதில் எங்களை போன்ற நீதிபதிகளுக்கு ஆர்வமாக இருக்கிறது. மேலும் தற்போது உள்ள இந்த காலத்திலும் தாலுகா அலுவலகத்தில் ஏழை,எளிய பொதுமக்கள் அடிக்கடி அலைந்து செல்ல வேண்டிய சூழ்நிலையும், பணக்காரர்கள் போனிலே சாதிக்கும் நிலையே உள்ளது.அந்த நிலை மாற வேண்டும். மேலும் வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டும், மக்கள் வரிப்பணத்தில் நானும், அவர்கள் கொடுக்கும் பணத்தில் வழக்காடும் நீங்களும் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு நீதிமன்ற புறக்கணிப்பை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டும். இவ்வாறு நீதிபதி பேசினார். இதில் மாவட்ட முதன்மை நீதிபதி முத்துசாரதா, நத்தம் நீதிபதி ஆப்ரினாபேகம், அரசு வழக்கறிஞர்கள் கிருஷ்ணமூர்த்தி, அமர்ஜோதி, நத்தம் வக்கீல்கள் சங்க தலைவர் சேக்சிக்கந்தர்பாட்சா, செயலாளர் செந்தில்குமார் உள்ளிட்ட வழக்கறிஞர்கள், நீதிமன்ற பணியாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# அ.வல்லாளபட்டியில் கலைஞரின் பிறந்தநாள் விழா: அமைச்சர் மூர்த்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



**மேலூர், டிச.14-**

திராவிட இயக்கத்தின் முன்னாள் தலைவரும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு மேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அ. வல்லாளபட்டி பேரூராட்சியில் குடும்ப அட்டை வைத்துள்ள அனைவருக்கும் திமுக சார்பில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கலைஞர் பிறந்தநாள் நிகழ்ச்சியில் மதுரை மாவட்டம் மேலூர் தொகுதி பொறுப்பாளர் வ.து.ந.ஆனந்த், தலைமை செயற்குழு உறுப்பினர் கரு. தியாகராஜன், அ. வல்லாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர், வல்லாளபட்டி சேர்மன் குமரன்,மேலூர் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் வ.ரெகுபதி (மேற்கு), ராஜேந்திர பிரபு (தெற்கு), செல்வராஜ் (வடக்கு), இளங்கண்ணன் (கிழக்கு), மேலூர் நகர்மன்ற தலைவர் முகமது யாசின், கொட்டாம்பட்டி ஒன்றிய பொறுப்பாளர்கள் ராஜராஜன் (தெற்கு), பாலசுப்பிரமணியன் (கிழக்கு), கேசம்பட்டி செ. ராஜா (மேற்கு), பழனி (வடக்கு), மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் தற்காகுடி சரவணன், வடக்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கலைவாணன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் அட்டப்பட்டி குமார், முன்னாள் பேரூர் கழகச் செயலாளர் கார்த்திகேயன், அ. வல்லாளபட்டி பேரூர் கழக பொறுப்பு குழு உறுப்பினர்கள் ரகுமத்துல்லா, வீ. வேலவன், ராமு, பெரியகருப்பன், முன்னமலை, கற்பகம், அன்வர் பேக், அஜ்மீர்கான், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கிடாரிபட்டி மதிவாணன், அம்பலகாரன்பட்டி லெட்சுமி ராமையா, கொட்டகுடி அஜிதா சரவணன், அ.வல்லாளபட்டி மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# நத்தம் மற்றும் கோபால்பட்டி பகுதியில் புகையிலை விற்ற 7 கடைகளுக்கு சீல்

**நத்தம், டிச.14-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக திண்டுக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளுக்கு புகார்கள் வந்தது. இதையடுத்து நத்தம் மற்றும் கோபால்பட்டி பகுதியில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் செல்வம், முருகன் சாபர்சாதிக்,வசந்தன் உள்ளிட்ட உணவு பாதுகாப்புதுறையினர் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது நத்தம் மற்றும் கோபால்பட்டி பகுதியில் உள்ள மளிகை மற்றும் பெட்டி கடைகளில் சோதனை செய்த போது அங்கு விற்பனைக்காக புகையிலை பொருட்கள் வைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து நத்தம் பகுதியில் உள்ள 5 கடைகளில் இருந்து 7 கிலோ புகையிலை பொருட்களை பறிமுதல் செய்த உணவு பாதுகாப்பு அதிகாரிகள் கோபால்பட்டி பகுதியில் 2 கடைகளில் இருந்து 6 கிலோ புகையிலையை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து 7 கடைகளுக்கும் தலா 25 ஆயிரம் அபராதம் விதித்த அதிகாரிகள் கடைகளுக்கு சீல் வைத்தனர்

# நத்தத்தில் மாரியம்மன் கோவிலில் விளக்கு ஏற்றி வழிபாடு

**நத்தம், டிச,14-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மாரியம்மன் கோவில் முன்பு விசுவஹிந்து பரிஷத் சார்பில் விளக்கேற்றும் நிகழ்ச்சி நிகழ்ச்சி நடந்தது.இதற்கு விசுவ ஹிந்து பரிஷத் நகர பொறுப்பாளர் தியாகராஜன் தலைமை தாங்கினார்.மாவட்ட பொறுப்பாளர் ராஜேந்திரபிரசாத்,நகர துணை அமைப்பாளர் முருகானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தொடர்ந்து மாரியம்மன் கோவில் முன்பு 108 விளக்குகள் ஏற்றப்பட்டு திருப்பரங்குன்றம் மலை மீது தீபம் ஏற்ற கோரிய நீதிமன்ற தீர்ப்பை தமிழக அரசு செயல்படுத்த வலியுறுத்தி வழிபாடு செய்யப்பட்டது. இதில் விசுவ ஹிந்து பரிஷத் ஒன்றிய செயலாளர் தனிவீரன், துணை தலைவர் மதிமாறன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# அலங்காநல்லூரில் அ.தி.மு.க. சார்பில் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பங்கேற்பு

**வாடிப்பட்டி, டிச. 14-**

அலங்காநல்லூரில் அ.தி.மு.க. சார்பில் 9 பேர் கொண்ட பூத்து கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. 5 ஆயிரம் 10 ஆயிரம் தருவதாக கூறி திமுகவினர் ஒட்டு கேட்பார்கள் நம்பாதீங்க அப்புறம் 5 வருசம் அனைவருக்கும் பட்டை நாமம் தான் நமக்கு கிடைக்கும் என்று எதிர்கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் தெரிவித்தார். மதுரை மாவட்டம் அலங்காநல்லூர்கேட்டு கடை தனியார் மண்டபத்தில் அ.தி.மு.க. சார்பில் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். பேரூர் செயலாளர் அழகுராஜா வரவேற்புரை ஆற்றினார். முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் எம். வி.கருப்பையா, மாணிக்கம், மகேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் கொரியர் கணேசன், அரியூர் ராதாகிருஷ்ணன், முன்னாள் யூனியன் சேர்மன் ராஜேஷ் கண்ணா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சட்டமன்ற எதிர்கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது., ஒவ்வொரு பூத்திற்கும் 9 பேர் கொண்ட குழுவாக 234 தொகுதிக்கும் பூத் கமிட்டி நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். நிர்வாகிகள் சிறப்பாக பணிபுரிய வேண்டும் எனவும், வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வினர் 5 ஆயிரம், 10 ஆயிரம் தருவதாக கூறி ஒட்டு கேட்பார்கள் நம்பி ஒட்டு போடாதீங்க. மரியதை கிடைக்கும்னு நம்பி மீண்டும் நீங்க ஒட்டு போட்டா 5 வருசத்துக்கு உங்களுக்கு மரியாதையே கிடைக்காது. உஷார் மக்களே என கூறினார். நம்பி வாக்களித்த பொதுமக்கள், அரசு ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள் என அனைவருக்கும் பட்டை நாமம் தான் கிடைக்கும் எனவே அ.தி.மு.க. வெற்றிக்கு அனைவரும் பாடுபட வேண்டும் என பேசினார்.

இதில் நிர்வாகிகள் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் முடுவார்பட்டி ஜெயச்சந்திரமணியன், புறநகர் மேற்கு மாவட்ட விவசாய அணி இணைச்செயலாளர் ஆர்.பி.குமார், வாவிடமருதூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திருநாவுக்கரசர், மகளிர் அணி ரேவதி, சாந்தி மற்றும் அலங்காநல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட கிளைக் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலையில் இன்று தி.மு.க. இளைஞரணி வடக்கு மண்டல சந்திப்பு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு

**சென்னை, டிச. 14-**

திருவண்ணாமலையில் இன்று நடக்கும் தி.மு.க. இளைஞரணி வடக்கு மண்டல சந்திப்பு கூட்டத்திற்கு கட்சியின் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

கட்சித் தலைவரும், முதல்வருமான மு.க. ஸ்டாலின், திருவண்ணாமலையில் இன்று (14.12.2025) நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு கழக இளைஞரணிக்கு அழைப்பு விடுத்து காணொலிக் காட்சி வாயிலாக ஆற்றிய உரையில், வணக்கம். நன்றாக இருக்கிறீர்களா? வருகின்ற ஞாயிற்றுக்கிழமை திருவண்ணாமலை மாவட்டத்தில், இளைஞரணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நடைபெறப் போவதாக தலைமைக் கழகம் அறிவித்தது, உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்... ஆனாலும், கழகத்தின் தலைமைத் தொண்டன் என்ற முறையில், உங்களை முறையாக அழைக்க வேண்டும் என்று இந்த விடியோவில் பேசுகிறேன்.

நம் எல்லோரையும் உடன்பிறப்புகள் என்று அழைக்க என்ன காரணம் தெரியுமா? எல்லோரது குடும்பத்திலும் அண்ணன் - தம்பி - அக்கா – தங்கை என்று இருப்பார்கள்; அதேபோல, நம் கழகத்திலும், எல்லோரும் அதே பாச உணர்வுடன் பழகவேண்டும் என்று தான் உடன்பிறப்பே என்று உறவு கொண்டாடுகிறோம்.

அப்படிப்பட்ட நம்முடைய கட்சியின் இளைஞரணிச் செயலாளராக இருக்கின்ற உதயநிதி, உங்கள் எல்லோரையும் கொள்கை அளவில் வளர்த்தெடுக்க வேண்டும் என்று பாசறைப் பக்கம் தொடங்கி, சமீபத்தில் வள்ளுவர் கோட்டத்தில் நடந்த, ''அறிவுத்திருவிழா'' வரைக்கும் ஏராளமான முன்னெடுப்புகளை செய்து கொண்டிருக்கிறார்.

அதேபோல, கிரவுண்ட் வொர்க் செய்ய நிர்வாகிகளை நியமித்திருக்கிறோம் என்று உங்கள் பெயர்கள் அடங்கிய பட்டியலை என்னிடம் காண்பித்தார். அதைப் பார்த்த போது, 45 ஆண்டுகளுக்கு முன்பு 1980-ல் நாங்கள் இளைஞரணி தொடங்கியபோது, எப்படி பெருமையாக இருந்ததோ, அதேபோல பெருமையாகவும், கர்வமாகவும் இருந்தது.

இளைஞர்களாக பொறுப்பிற்கு வந்திருக்கின்ற உங்களுக்கு "திராவிடம்" எனும் மக்களுக்கான மாபெரும் ஐடியாலஜியை நீங்கள் பேசப் போகிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் மக்கள் இயக்கத்தை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு செல்கின்ற தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக - தமிழின் உயர்வுக்காக - போராடுகின்ற மாபெரும் வரலாற்று கடமை வந்திருக்கிறது.

இந்தியாவிலேயே இன்றைக்கு தமிழ்நாடு தனித் தன்மையோடு இருக்கிறது. அதன் தொடர்ச்சியாக நீங்கள் வரப்போகிறீர்கள் என்பதை நினைத்து எனக்கு பெருமையாக இருக்கிறது. சென்னையில் அறிவுத்திருவிழா நடந்த போது, என்னடா... தலைநகரில் மட்டும், இப்படி நிகழ்ச்சி நடத்துகிறார்களே, மற்ற பகுதிகளில் நடந்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன்.

உதயநிதி இந்த வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப் பிற்கான அழைப்பிதழை என்னிடம் கொடுத்து, வடக்கு மண்டலத்தில் இருக்கின்ற 29 கழக மாவட்டங்கள் – 91 சட்டமன்றத் தொகுதிகளில் இருந்து, கிளை – வார்டு – பாக அளவில் நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு இலட்சத்து 30 ஆயிரம் இளைஞர்கள் வருகிறார்கள் என்று சொன்னதும், வார்டு, கிராம அளவில் இந்த அறிவுத் திருவிழா நடைபெறப் போகிறது என்று மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. ஞாயிறு அன்று சந்திப்போம். புதிய திராவிட இயக்கத்தினரான உங்களை வரவேற்கிறேன்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



பாராளுமன்ற தாக்குதல் நினைவு தினமான நேற்று பாராளுமன்றத்தில் அமைக்கப்பட்ட நினைவிடத்தில் பிரதமர் மோடி, துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன், மத்திய அமைச்சர்கள், எம்.பி.க்கள், எதிர்க்கட்சி தலைவர்கள் ராகுல் காந்தி, சோனியா காந்தி உள்பட மூத்த தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.



துறைமுகம் சட்டமன்றத்தொகுதி, வால்டாக்ஸ் சாலை, அண்ணா பிள்ளை தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் "ஒருங்கிணைந்த வளாகத்திலுள்ள" புதிய சமுதாய நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடலின் கட்டுமான பணிகளை துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது துறைசார்ந்த அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வைகை அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறப்பு

## கரையோர மக்களுக்கு எச்சரிக்கை

**மதுரை, டிச. 14-**

வைகை அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறந்து விடப்படுவதால் 6 மாவட்டங்களில் வைகை கரையோரம் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி பொதுப்பணித்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள 71 அடி உயரம் கொண்ட வைகை அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் மூலம் மதுரை, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்கள் குடிநீர் மற்றும் பாசன வசதி பெற்று வருகின்றன. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு புயல் மற்றும் வடகிழக்கு பருவமழை காரணமாக மாவட்டத்தில் கன மழை பெய்ததாலும் அணையின் நீர்பிடிப்பு பகுதிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்ததாலும் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது.

அணையின் நீர்மட்டம் 64 அடியை கடந்த நிலையில் விருதுநகர் கிருதுமால் நதிக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது முல்லைப்பெரியாறு அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறப்பால் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதனால் நேற்று காலை முதல் 5 மாவட்ட பாசனத்திற்கு 1900 கனஅடி, கிருதுமால் நதி பாசனத்திற்கு 442 கன அடி, மதுரை, திருமங்கலம், சேடப்பட்டி குடிநீர் தேவைகளுக்காக 69 கனஅடி என மொத்தம் 2319 கன அடி நீர் திறக்கப்படுகிறது. கால்வாய் மூலம் 1900 கன அடி மற்றும் 7 சிறிய மதகுகள் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் மதுரை, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் வைகை கரையோரம் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி பொதுப்பணித்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட சேது பாஸ்கரா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாமில் கலந்துக் கொண்ட மாற்றுத்திறானாளிகளுக்கு அடையாள அட்டையை வழங்கினார். இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மதுரை மாநகராட்சி சார்பில் மதுரைக்கல்லூரியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெற்ற பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு தாய்சேய் நலபெட்டகத்தை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நேற்று வழங்கினார். அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன் மற்றும் மருத்துவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் 2வது கட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து மதுரை மாவட்டத்தில் திருப்பாலை இ.எம்.ஜி. யாதவர் பெண்கள் கலைக் கல்லூரி கூட்டரங்கில் 2-ம் கட்டமாக பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கான டெபிட் கார்டுகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கி தொடங்கி வைத்தார். மாவட்ட கலெக்டர். பிரவீன் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வெங்கடேசன், பூமிநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.



அலங்காநல்லூரில் அ.தி.மு.க. சார்பில் நடைபெற்ற பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் சட்டமன்ற எதிர்கட்சி துணை தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன், பேரூர் செயலாளர் அழகுராஜா, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் எம்.வி.கருப்பையா, மாணிக்கம், மகேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் கொரியர் கணேசன், அரியூர் ராதாகிருஷ்ணன், முன்னாள் யூனியன் சேர்மன் ராஜேஷ் கண்ணா ஆகியோர் கலந்து கொண்டனர்.